பக்கங்கள்: 16

விலை : 30/-

# காலைக்கதிர்


Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 01 திங்கட்கிழமை 17.08.2020 கதிர் 281

**இனி இது ரகசியம் அல்ல!**

நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் நடைபெற்றவற்றை இன்று பிரஸ்தாபிப்பேன் என்று கூறியிருந்தேன்.

அந்தக் கூட்டத்தில் முக்கியமாக இரண்டு விடயங்கள் பக்கம்02




# யாழில் முன்னாள் போராளிகளின் விவரங்கள் சேகரிக்கும் இராணுவம்

## அச்சத்தில் உறவுகள்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 16

யாழ்ப்பாணத்தில் வீடுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் முன்னாள் போராளிகளின் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரிமலைப் பகுதியில் நேற்று அதிகாலை வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டில் இருந்த அனைவரது விவரங்களையும் சேகரித்து அவற்றைப் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் வீடுகளில் முன்னாள் போராளிகள் யாராவது இருக்கின்றனரா என்ற விவரங்களை அளிக்குமாறும் கேட்டுள்ளனர். பக்கம் 02

# பயங்கரவாதத்தை தலைதூக்கச் செய்ய புலம்பெயர் தரப்புகள் சில முயற்சிகள்

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.17

புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளைப் பயன்படுத்தி மீண்டும் பயங்கரவாதத்தைத் தலைதூக்கச் செய்வதற்கு புலம்பெயர் தரப்பினரால் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் மீண்டும்

பயங்கரவாத அச்சுறுத்தல் நிலைமை ஏற்படாது என மக்கள் எண்ணக்கூடாது எனவும்,



புலனாய்வுப் பிரிவு சிறப்பாகச் செயற்படாவிட்டால் பக்கம் 02

# '19' க்கு முழுமையாக முடிவுகட்ட வேண்டும்!

## – சுரேன் ராகவன் எம்.பி. வலியுறுத்து –

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நேற்று நேரடியாகக் கலந்துகொண்ட நிகழ்ச்சியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இந்த 19ஆவது திருத்தமானது இலங்கை அரசாங்கத்தையும் ஆட்சியிலிருக்கும் பக்கம் 02



# அரசுக்குள் வலுக்கிறது அமைச்சரவை எதிர்ப்பு!

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் பிரதான பங்காளிக் கட்சிகள் அரசால் வழங்கப்பட்ட அமைச்சரவை நியமனம் குறித்து கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

கடந்த முறை லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இம்முறை லங்கா சமசமாஜக் கட்சிக்கு எந்த அமைச்சுப் பதவியும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் அரசின் தீர்மானங்கள் குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாம் குறிப்பிடத்தக்கவை.

ஒன்று – தமிழரசின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனம் பற்றியது. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட கலையரசனை மாற்றுவதில்லை என்ற தீர்மானத்தோடு விடயம் அடங்கி விட்டது என்பதுதான் வெளியில் தெரியும் தோற்றப்பாடு. அது உண்மையும் கூட. இனிக் கலையரசனை மாற்றி அந்த இடத்தை மாவை கைப்பற்ற முயல்வது மாவைக்குப் பெரும் அரசியல் பின்னடைவாகி விடும் என்பது மாவை தரப்புக்குத் தெரியும்.

கலையரசனை மாற்றுவதில்லை என்ற திட்டத்தை மாவையே கூட்டத்தில் முன் மொழிந்தாலும், விடயம் அத்தோடு அடங்கி விடவில்லை. அதனை நீறு பூத்த நெருப்பாக வைத்துக் காரியமாற்றவே மாவை ஆதரவுத் தரப்பு திட்டம் தீட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தத் தேசியப் பட்டியல் சர்ச்சை விவகாரத்தை சனியன்று நடைபெற்ற அரசியல் விவகாரக் குழுவோடு முடிக்கவே சம்பந்தன் விரும்பினார். அப்படி ஒரு முடிவை அவர் அங்கு அறிவிக்க முயன்ற போது மாவையே சீறி எழும்பினார். மத்திய குழுவிலும் அது குறித்துப் பேச வேண்டும் என்று பாய்ந்தார் அவர்.

அவர் தரப்பின் உள்திட்டம் குறித்து அறிந்திராத – புரிந்திராத – சுமந்திரன் கூட்டத்தில் மாவையின் கருத்தை ஆமோதித்தார்.

*"நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 29ஆம் திகதி நடைபெறும் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இதைப் பற்றி எல்லோரும் கட்டாயம் பேசுவார்கள். ஆகவே அது முடிந்த விடயமாக நாம் ஏன் இன்று தீர்மானம் எடுக்க வேண்டும்? அன்று பேசுபவர்கள் அது பற்றிப் பேசட்டும்."* – என்று சுமந்திரன் அறிவித்தார் – அப்போதைக்கு அப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்த திருப்தியோடு.

மத்திய குழுவுக்கு வந்து இதுபற்றிப் பேசிப் புதிதாக என்ன சாதித்து விடுவார்கள் என்ற அப்பாவித்தன எண்ணத்தில் சுமந்திரன் அப்படிக் கூறியிருக்கலாம். ஆனால் இந்த விடயத்தை மத்திய குழுவில் பேசும் விவகாரமாக மாற்றி அங்கு இதனை மாவை ஆதரவுத் தரப்பு இழுத்தமைக்குப் பின்னால் வலுவான உள்குத்துத் திட்டம் உண்டு.

தலைவராக இருந்த மாவையை மீறியே இவ்வாறு நியமன விவகாரத்தில் நடக்கும் ஒரு செயலாளரை – சுமந்திரன், சம்பந்தன், ஸ்ரீதரன் தரப்புக்கு ஆதரவான வரை – இப்பதவியில் விட்டு வைப்பது வரும் மாகாண சபைத் தேர்தலின் போதும் தமக்குப் பெரும் சிக்கல் என்றும், நியமனப்பத்திரங்கள் விடயத்தில் ஒப்பமிடும் அதிகாரத்தை அவரிடம் விட்டு வைத்திருப்பது தமக்கு ஆபத்தானது என்றும், மாவையைச் சூழ நின்று விடயங்களை நகர்த்தி, ஒப்பேத்தும் தரப்புகள் நினைக்கின்றன.

சுமந்திரன், சம்பந்தன், ஸ்ரீதரன் தரப்புக்கு இசைந்து தனித்துச் செயற்படக் கூடிய ஒருவரைப் பொதுச் செயலாளர் பதவியில் தக்கவிடாது துரத்த வேண்டும் என்பதில் அவை முனைப்பாக இருக்கின்றன.

ஏற்கனவே பொதுத் தேர்தலில் கிட்டிய பெரும் தோல்வியோடு பொதுச்செயலாளர் பதவியைத் துறக்கத் தயாராக இருந்த செயலாளர் துரைராஜசிங்கத்துக்கு மத்திய குழுக் கூட்டத்தில் வைத்துப் பல முனைத்தாக்குதல் நடத்தினால் பதவியை விட்டு விலக அங்கேயே அவர் ஒப்புக் கொள்வார் என அத் தரப்புகள் நம்புகின்றன. அதற்கான சதி வலைத் திட்டமே இப்போது தயாராகி வருகின்றது. அப்படி அவர் பதவி விலகினால் அவரது இடத்துக்கு ஒருவரை – தமது ஆள் ஒருவரை – தயார்ப்படுத்துவதிலும் மாவை தரப்பு முனைப்பாக இருக்கின்றது.

தப்பித் தவறி இந்த மத்திய குழுவிலும் அதற்கு அடுத்து வரப் போகின்ற கூட்டங்களிலும் துரைராஜசிங்கத்தை பொதுச் செயலாளர் பதவியிலிருந்து துரத்த முடியா விட்டால் –

வரக்கூடிய மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் கட்சித் தலைவர் மாவை சேனா திராசா மூலம் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டியாவது புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்து விட வேண்டும் என்பதில் மாவை தரப்பு சீரியலாக இருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால், அப்படி துரைராஜசிங்கத்தை அப்பதவியில் இருந்து அகற்ற முயன்றால் – கட்சித் தலைமை வடக்கில் மாவையிடம் இருப்பதால் பொதுச் செயலாளர் பதவி கிழக்குக்குரியது என்ற முறையில் – கிழக்கில் திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனை அப்பதவிக்கு நியமிக்க சம்பந்தன் தரப்பில் ஒரு யோசனை உண்டு.

ஏற்கனவே, தேசியப்பட்டியல் நியமன விடயத்தில் குகதாசன் ஏமாற்றப்பட்டிருப்பதால், பொதுச் செயலாளர் பதவியை அவருக்கு அளிப்பதன் மூலம் நிவாரணம் வழங்கலாம் என்பது சம்பந்தனின் திட்டம்.

வரப்போகும் மாகாண சபைத் தேர்தலின்போதும் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி மிகவும் முக்கியம் என்பது மாவை தரப்புக்கு நன்கு தெரியும். புரியும். அச்சமயம் சுமந்திரன் – ஸ்ரீதரனின் கை வடக்கில் ஓங்குவதைத் தடுப்பதற்கு செயலாளரைத் தம் பக்கம் வைத்திருக்க வேண்டியது கட்டாயம் அவர்களுக்கு.

அதற்கான துவந்த யுத்தம் வவுனியாவில் வரும் 29ஆம் திகதி தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்டவிழும் என்று நிச்சயமாக நம்பலாம்.

திருகோணமலை அரசியல் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற இரண்டாவது விடயம் என்னவென்பதை நாளை பார்ப்போமா?

–மின்னல்–

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தம்மால் வெற்றி பெற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

'இலங்கையில் கொவிட்– 19 தற்போதைய நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்திகள்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளராக மீண்டும் நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளமையானது நாட்டுக்கும் மக்களுக்கும் சேவையாற்றுவதற்கு கிடைக்கப் பெற்ற சிறந்ததொரு வாய்ப்பாகவே கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற அவருடைய தேர்தல் கொள்கைப் பிரடனத்தில் தேசிய பாதுகாப்பு என்ற விடயத்திற்கே முதலிடம் அளித்திருந்தார் என்றும் தேசிய பாதுகாப்பு ஸ்திரப்படுத்தப்படும் வரை உலகத்தில் காணப்படும் எந்தவொரு நாட்டுக்கும் வளர்ச்சி என்ற ஒன்றைப் பற்றி நினைப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கோட்டாபயவின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டு மக்கள் அனைவரும் சமாதானத்துடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் காணப்படும் பிரதான சவாலாக அமைவது பிரிவினைவாதமாகும் எனக் கமால் குணரத்ன கூறியுள்ளார்.

2009 மே மாதம் 19ஆம் திகதி பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதோடு மீண்டும் இது போன்றதொரு அச்சுறுத்தல் ஏற்படாது என்று எண்ணலாம். ஆனாலும் அந்த அமைப்பில் காணப்பட்ட 12, 242 பேருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளதாகவும் ஈழவாதத்திற்கு ஆதரவளிக்கும் குழுவினரால் புனர்வாழ்வளிக்கப்பட்ட இந்த இளைஞர் யுவதிகளை உபயோகித்து மீண்டும் பயங்கரவாதத்தைத் தலைதூக்கச் செய்வதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், எமது புலனாய்வுப் பிரிவு சிறப்பாக செயற்படாவிட்டால் எம்மால் வெற்றி பெற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## '19' க்கு முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசையும் சாய்த்து வீழ்த்தி விடும் நிலையை ஏற்படுத்தியது.

19ஆவது திருத்தத்தை உருவாக்கியமை தவறல்ல. ஆனால், அதனை உருவாக்கிய விதம், உருவாக்கப்பட்ட வேகம் தான் இன்று நாட்டில் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது – என்றார்.

# வீட்டில் இருந்து நல்லூர் முருகனைத் தரிசியுங்கள்!

**– யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள் –**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர் உற்சவத்துக்குப் பெருமளவில் மக்கள் வருவதைத் தவிர்த்து வீட்டில் இருந்து முருகக் கடவுளைத் தரிசியுங்கள்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் மகேஷ் சேனாரத்ன தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணி வழிபாட்டை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் பொலிஸார், இராணுவத்தினர் அதேபோல் சுகாதாரப் பிரிவினர் மற்றும் கோயில் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் சுகாதாரப் பிரிவினரால் சுகாதார நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் அதனைப் பின்பற்றி தமது வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றார்கள்.

எனினும், அண்மைய நாட்களில் கோயிலுக்கு வரும் அடியவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாகக் காணப்படுகின்றது. மக்கள் இது தொடர்பில் சற்றுத் தெளிவாக இருக்க வேண்டும்.

தற்போது நாட்டில் கொரோனா தொற்று சற்று தணிந்து காணப்படுகின்றது. எனினும், சமூகத் தொற்று தொடர்பில் நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

உதாரணமாக, அண்மைய நாட்களில் இராஜாங்கனைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்ட விடயம் தொடர்பில் நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் கொரோனாத் தொற்று ஏற்படா வண்ணம் பாதுகாப்புப் பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவினரின் முயற்சியால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம். மக்களின் பூரண ஒத்துழைப்புடன் அதனைச் செயற்படுத்தியுள்ளோம்.

எனினும், நல்லூர் ஆலயத்தைப் பொறுத்தவரையில் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமிருந்தும் பொதுமக்கள் ஆலயத் தேர் உற்சவத்தில் கலந்து கொள்வது வழமை. நாட்டில் கொரோனாத் தொற்று அச்ச நிலைமை காணப்படுவதன் காரணமாக, இம்முறை அவ்வாறு இடம்பெற அனுமதிக்க முடியாது.

இம்முறை நல்லூர் ஆலய உற்சவத்தின் தேர் உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது. இந்தமுறை கோயில் தேர் உற்சவத்துக்கு மக்கள் அதிகளவில் வருவதைத் தவிர்த்து சமூகத்தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நல்லூர் ஆலயத் தேர் உற்சவத்துக்கு அதிகளவில் வருகை தராது வீடுகளிலிருந்து தரிசியுங்கள். அது உங்கள் எதிர்காலத்துக்கு நல்லதாக அமையும் – என்றார்.

# 19ஐ முழுமையாக இல்லாதொழிக்க ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பு

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு ஆதரவு வழங்கமாட்டோம். தடைகளை நீக்கி, முன்நோக்கி பயணிப்பதற்குத் தடங்கலாக உள்ள விடயங்களைத் திருத்துவதற்கு மட்டும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக நிறைய நன்மைகள் கிடைக்கப்பெற்றன. ஆனாலும், அதில் சிற்சில குறைபாடுகள் இருக்கின்றன எனப் பரவலாகக் கருத்துகள் முன்வைக்கப் பட்டு வருகின்றன. எனவே, இவை தொடர்பில் கலந்துரையாடி சாதகமான முறையில் 19ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு நாம் தயார். ஆனால், அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பிரதான நோக்கங்களை மாற்றியமைப்பதற்கு முயற்சித்தால் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்.

நிறைவேற்று, சட்டவாக்கத்துறைகளுக்குப் பகிரப்பட்டுள்ள அதிகாரங்களில் மாற்றம், வெளிநாட்டு பிரஜையொருவருக்கு இந்நாட்டு தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கல் போன்ற திருத்தங்கள் இடம்பெற்றால் அவற்றுடன் உடன்பட முடியாது.

அதேபோல் ஜனாதிபதியின் பதவிக் காலம், நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் என்பன 5 வருடங்களாக இருக்கவேண்டும். ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம் என்றதற்போதைய நிலையும் மாறக்கூடாது. அரசமைப்பு பேரவை, சுயாதீன ஆணைக் குழு, தகவல் அறியும் உரிமை ஆகியன 19 இன் பிரகாரமே தொடரவேண்டும்.

எனவே, இவற்றை இல்லாதொழிப்பதற்கு இடமளிக்கமுடியாது. எதிர்மறையான திருத்தங்களுக்கு நாம் எதிர்ப்பு. ஆனால், நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்வதற்கு நடைமுறை சிக்கலாக உள்ள காரணிகளைத் திருத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் – என்றார்.

## அரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனைக் கூறியுள்ளார்.

தேசியப் பட்டியலில் சேர்ப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பியதாஸவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது. எனினும், அதனை அரசு நிராகரித்துள்ளது. அந்த இடம் தமிழரான சுரேன் ராகவனுக்கு வழங்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

## விபத்தில் 3 பேர் காயம்!

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள சுற்றுவட்ட சந்தியில் நேற்று இரவு 9.00 மணியளவில் ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஹொரவப்பொத்தான வீதியூடாக மாவட்ட செயலக பக்கம் நோக்கி பயணித்த ஓட்டோவுடன் கண்டி வீதியூடாக வைத்தியசாலை வீதி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளின் ஓட்டி, ஓட்டோச் சாரதி உட்பட இருவரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

## யாழில் முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் போராளிகள் என்று யாராவது இருந்தால் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

என்ன காரணத்துக்காக முன்னாள் போராளிகளின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என அப்பகுதி மக்கள் வீட்டுக்கு வந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது, அது பற்றி எதுவும் கூற முடியாது. எமக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது என்று அவர்கள் பதிலளித்துள்ளனர்.

அதேநேரம், மக்களின் விவரங்களைப் புதுப்பிப்பதற்காகவே இவ்வாறு இராணுவத்தினர் தகவல்களைத் திரட்டி வருகின்றனர் என்று அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையால் முன்னாள் போராளிகளின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர்.

# போலித் தேசியம் பேசும் ஏமாற்று அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்காலை வைத்து அரசியல் செய்கின்றனர்

## முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சாட்டை

கொழும்பு, ஓக.17

போலித் தேசியம் பேசிவருபவர்கள் முள்ளிவாய்க் காலை வைத்து அரசியல் செய்து மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றனர் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முள்ளிவாய்க்கால் என்ற புனித பூமியை தங்களது சுய அரசியலுக்காக கொச்சைப்படுத்த வேண் டாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவாலயம் சென்று சில அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்திய பிரமாணம் செய்வது தொடர்பில் நேற்று ஊடகங் களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் போலித் தேசியம் பேசும் சில அரசியல் கட்சிகள் தாம் முள்ளிவாய்க்கால் மண்ணில் சத்தியபிர மாணம் செய்வதாக கூறி மக்களை முட்டாளாக்கி வருகின்றன.

முள்ளிவாய்க்கால் என்பது இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்த உறவுகளின் நினைவாக வாழ்ந்து கொண்டிருக் கும் உறவுகள் ஒன்று கூடி நினைவுகூரும் ஒரு புனித மான பிரதேசமாகும். அவ்வாறான புனிதமான பிர தேசத்தில் தங்களது சுயநல அரசியலுக்காக அந்த முள் ளிவாய்க்காலை பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக மக்களை முட்டாளாக்கி வரும் செயற்பாடாகவே இதை பார்க்கின்றேன்.

இலங்கையில் முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது தற்போது போலி தேசியம்



பேசுபவர்கள் எங்கு இருந்தார்கள்? இவர்கள் மக்களு டன் மக்களாக இருக்கவில்லை. மாறாக தங்களது பணி யிலும் வெளிநாடுகளிலும் இருந்துவிட்டு இப்போது முள்ளிவாய்க்காலில் வந்து தங்களது போலித் தேசிய அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர் எனக் கூறும் – நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள – உறுப்பினர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள சத்தியப்பிர மாண நிகழ்வில் இலங்கை அரசமைப்பைப் பேணிப் பாதுகாப்பேன் என்று உறுதிமொழி எடுக்க உள்ளனர்.

குறிப்பாக அரசமைப்பின் இரண்டாம் உறுப்புரையில் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே ஒற்றையாட்சியை பேணிப் பாது காப்போம் என்று அவர்கள் உறுதி உரை எடுக்க உள் ளனர்.

பின்னர் இங்கு மக்கள் மத்தியில் பொய்களை கூறி அவர்களை மறுபடியும் ஏமாற்றும் படலத்தை தொடர்ந்து வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாணசபை ஆட்சியில் இருந்தபோது ஐந்து வருடங்களையும் அந்த சபையை அர்த்தமற்ற சபையாக்கியவர் விக்கினேஸ்வரன். இப்போது மீண்டும் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஐந்து வருடம் வீணாக்கவே அவர் தெரிவாகியுள்ளார்.

அதே போல இன்னொரு தரப்பு 'சார்வதேசம்',' சார்வ தேசம்' என்று கூறி வருகின்றனர். அந்த சார்வதேசத் தின் அனுசரணையை பெறுவதற்கு இவர்களிடம் என்ன வழிமுறைகள் இருக்கின்றது என்று இன்றுவரை தெளி வாக அவர்கள் குறிப்பிடவில்லை.

எனவே போலி தேசியம் பேசி மக்களை முட்டாளாக் கும் இவ்வாறான நபர்களை மக்கள் இனம்கண்டு கொள்ள வேண்டும். – என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சொகுசு பஸ்ஸின் மீது நீர்வேலியில் கல்வீச்சு

யாழ்ப்பாணம்,ஓக.17

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கற்களால் வீசிவிட்டுத் தப்பிச் சென் றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டி ருந்த சொகுசு பஸ் மீது நீர்வேலிப் பகுதியில் வைத்து எதிர் திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கற்களால் வீசிவிட்டு தப்பிச் சென் றுள்ளனர்.

இதில் பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடி சேத மடைந்ததோடு சாரதிக்கு கண்ணில் சிறு காயமும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.






# சீனக்குடாவில் ஹெரொயினுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 60 மில்லி கிராம் ஹெரொயின் போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த மூவரை இம் மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எம்.அன்பாஸ் இன்று உத்தரவிட்டார்.

திருகோணமலை மட்கோ, கூம்பூகார், பாலையூற்று பகுதி களை சேர்ந்த 21, 30 மற் றும் 23 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் திருகோணமலை கருமலையூற்று அண் டிய பகுதியில் ஹெரொயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவ லின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர்.

### நான்கு மாதங்களின் பின்னர்

# காத்தான்குடியில் மூவருக்கு டெங்கு

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடியில் மூன்று பேர் டெங்கு நோய்த் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொதுச் சுகாதார பரிசோதகர் கள் தெரிவித்தனர்.

காத்தான்குடி சுகாதார அலுவலக பிரிவிலுள்ள காத்தான்குடி முதலாம் குறிச்சி அல்அக்ஷா வீதி யில் இருவருக்கும், புதிய காத்தான்குடி ஏ.எல்.எஸ். மாவத்தையில் ஒருவருக்கும் என மூன்று பேருக்கு டெங்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக காத் தான்குடியில் ஒருவருக்கும் டெங்கு அடையாளம் காணப்பட்டிராத நிலையில், இவ்வாறு மூவர் டெங்கு நோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து காத்தான்குடியில் சுகாதார அலு வலகத்தால் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தி யர் யு.எல்.நசிர்தீனின் ஆலோசனையின் பேரில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வழிகாட்டலில் மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

டெங்கு அடையாளம் காணப்பட்ட வீதிகள் மற் றும் வீடுகள் உட்பட பல இடங்களிலும் இந்த மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

# வவுனியாவில் மூன்று கடைகள் ஒரே இரவில் உடைத்துத் திருட்டு








வவுனியா, ஓக.17

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் ஒரே இரவில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா வைரவப்புளியங்குளம் பொலிஸ் காவல் அரணிலிருந்து 100 மீற்றர் தொலைவில் ஆதிவிநாயகர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள இறுவட்டு விற்பனை நிலையம் , சிகையலங்கார நிலையம் என்பனவும் காவல் அரணிலிருந்து குருமன்காடு வீதியில் 100மீற்றர் தொலை வில் அமைந்துள்ள வர்ணபூச்சு விற்பனை நிலையமும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையத்தின் பூட்டை உடைந்து உள்நுழைந்த திருடர்கள் பணம் மற்றும் பொருள்களைத் திருடிச் சென்றுள் ளனர் என உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வெள்ளி இரவு வவுனியா பண்டாரிக்குளம் பகுதியிலும் வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 13 நீக்கமும் சுலபமானதல்ல

தனக்குக் கிடைத்திருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தன்னிஷ்டப்படி புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கு ராஜபக்ஷக்களின் அரசு தீர்மானித்தாலும் கூட அது நடைமுறைச் சாத்தியமற்றது என அவதானிகள் கணிக்கின்றனர்.

ஆளும் பொதுஜன பெரமுனவின் கூட்டுக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர இதனைப் பச்சையாகவே கூறிவிட்டார்.

*"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஒரு சிலர் கூறுவது போல மிக இலகுவாக நீக்கிவிடவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியாது. அது இரண்டு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தமாகும். அது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும்."* - இப்படி வலியுறுத்தும் அவர், அதையும் தாண்டி இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுகின்றார். அது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

*"13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே சுதந்திரக் கட்சியின் நீடித்த நிலைப்பாடாகும். அதில் எந்த மாற்றமும் இல்லை. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அரசியல்வாதிகளின் கைகளுக்கு செல்லாமல் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்து சிந்திக்க வேண்டும்."* - என்றும் புதுக் கதை எடுத்து விட்டிருக்கின்றார் அவர்.

சரியோ, பிழையோ, தற்போதைய ஆளும் பொதுஜனபெரமுன கூட்டுக்குள் சுதந்திரக் கட்சியும் அடக்கம். கூட்டரசில் அவர்களின் பதினான்கு எம்.பிக்களும் இடம் பெறுகின்றனர். அவர்களுடைய கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகரா வெளியிட்டிருக்கும் கருத்து கூட்டுக்குள்ளும் வெளியிலும் மூன்று முக்கிய முரணிலைகளைத் தோற்றுவித்திருப்பது அவதானிக்கப்பட வேண்டும்.

முதலாவது - அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி செய்யும் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே ஆளும் பொதுஜனப் பெரமுனவை ஆக்கிரமித்து நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் பலரின் நிலைப்பாடு. அதற்கு முரண்படுகின்றார் தயாசிறி.

அத்துடன் -13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது அதனை மிக மோசமாக எதிர்த்தவர்கள் அப்போது எதிரணியில் இருந்த சு.கவினர்தான். ஆனால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் சு.கவின் ஒரே நிலைப்பாடு என்று அவர் கூறுவது, உண்மையானது அல்ல என்றாலும் இன்றைய நிலையில் அக்கட்சியின் செயலாளர் அதனைக் கூறுவதனால் அதுவே கட்சியின் இன்றைய நிலைப்பாடு எனக் கருதலாம்.

இரண்டாவது - அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் ஏற்கனவே அரசமைப்பு ரீதியாகப் பகிரப்பட்டுள்ளன. அவை நடைமுறைப்படுத்தப்படவில்லையே தவிர, அரசமைப்புச் சட்டத்தில் அவை உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தவும் கூடாது, அரசமைப்புச் சட்டத்தில் அந்த அதிகாரப் பகிர்வு விடயத்தை விட்டு வைக்கவும் கூடாது என்பதுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் ஒரே நிலைப்பாடு, அதற்கு முரணான நிலைப்பாட்டை இப்போது பகிரங்கப்படுத்துகின்றார் தயாசிறி.

மூன்றாவது - இந்த அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் கூறும் மற்றொரு கருத்தும் மிக விசித்திரமானதாகும். *"காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அரசியல்வாதிகளின் கைகளுக்குச் செல்லாமல் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும்."* - என்று அவர் கூறுவது முற்றிலும் சிறுபிள்ளைத்தனமான - வேடிக்கையான - நிலைப்பாடாகும்.

அதிகாரப் பகிர்வு என்பது மத்தியிலிருந்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது. பகிரப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிப்பவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள்தாம். அதுதான் முறைமை. மக்களால் தெரிவு செய்யப்படுவோர் தேர்தலில் நின்று வெற்றி பெறும் அரசியல்வாதிகளே. ஆக, அதிகாரம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டால் அதைப் பிரயோகிக்கப் போகின்றவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல்வாதிகள். அப்படி இருக்கையில் அரசியல்வாதிகளின் கைகளுக்கு செல்லாமல் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை எப்படி மாகாணங்களுக்குப் பகிர முடியும்?

பதின்மூன்றாவது திருத்தத்தை மாற்றுவது தொடர்பில் சு.க செயலாளர் இவ்வாறு முரணிலையான கருத்துக்களை வெளியிட்டாலும், அதற்கு ஊடாக ஒரு செய்தி வெளிப்படுத்தப்படுகின்றது.

அது - அரசமைப்பை மாற்றும் ராஜபக்ஷக்களின் ஒரு நிலைப்பாடான எண்ணத்துக்கு - திட்டத்துக்கு - மாற்றான சிந்தனைப் போக்குடைய கணிசமான எம்.பிக்கள் அவர்களின் பொதுஜன பெரமுன அரசில் இடம்பெற்றுள்ளனர் என்பதே அது.

தவிரவும், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ராஜபக்ஷக்கள் அரசு பெறுவதற்கு தமிழ்ப் பிரதிநிதிகளிலும் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்று கூறும் ஈ.பி.டி.பி., 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதன், மூலம் சுயாட்சியை ஆரம்பிக்கலாம், பின்னர் அதை விஸ்தரிக்கலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. அதேபோல பிரிவினைக்காகப் புலிகள் இயக்கத்தில் முன்னர் ஆயுதம் தாங்கிப் போராடியவர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன்.

இவர்கள் எல்லோரும் 13 நீக்கத்துக்கு இலகுவாக இசைந்து கொடுப்பார்களா என்பதும் கூடக் கேள்விக்குறியே.

# சர்வதிகார நோக்குடன் செயற்படுகின்றதா அரசு? எதிர்க்கட்சியின் தீயநோக்குடனான பொய்யே அது!

### என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஓக.16

அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியை நோக்கி செல்கின்றது என எதிர்கட்சியினர் தெரிவிப்பது தீயநோக்கத்துடனான பொய் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகாரம் தொடர்பாகக் கதைப்பவர்கள் உண்மையில் அறிவற்றவர்கள் எனவும் தாங்கள் ஒருபோதும் சர்வாதிகாரிகளாக இருந்தவர்கள் அல்லர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின்போதே சர்வாதிகார போக்குகள் காணப்பட்டன என்றும் தலைவர்கள் தாங்கள் விரும்பிய விதத்தில் நடந்துகொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போலியான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் யுத்தவீரர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தங்கள் நலனுக்கு ஏற்றவிதத்தில் சட்டங்களை இயற்றியதுடன், தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்றும் மக்களின் உணர்வுகளை முற்றாக புறக்கணித்தார்கள் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் கையகப்படுத்தும் நிலங்கள் ஆராய விசேட குழு!

கொழும்பில் பலவந்தமாகக் கையகப்படுத்தப்படும் நிலங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஓய்வு பெற்ற பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் கமால் குணரத்ன மேலும் கூறியுள்ளவை வருமாறு –

'கொழும்பில் பெரும்பாலான இடங்களில் பலவந்தமாக மற்றும் மோசடி செய்து நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே அவ்விடயம் தொடர்பாக முறையான விசாரணையை முன்னெடுப்பதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட பிரிவொன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இதேவேளை, போதைப்பொருள் கடத்தல் காரரும், ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவின் தலைவருமான கஞ்சிபானி இம்ரானுக்கு சிறைச்சாலைக்குள் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் சிறை அதிகாரி தொடர்பான காணொளி ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரயிலுடன் மோதியது வாகனம் உயிரிழந்தார் குடும்பஸ்தர் கல்குடாவில் சம்பவம்

மட்டக்களப்பு, ஓக.17

மட்டக்களப்பு – கல்குடாரயில் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) இடம்பெற்ற இந்த விபத்தில் மட்டக்களப்பு – சேத்துக்குடாவைச் சேர்ந்த செபஸ்ரியன் அருள் நாதன் (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற சரக்கு ரயிலுடன் கென்டர் ரக வாகனமொன்று மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி வாகனம் தனது வேக கட்டுப்பாட்டினை இழந்தமையே விபத்துக்கு காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பொதுமக்கள் பார்வைக் கூடத்துக்குப் பூட்டு!

இலங்கையில்பொதுத்தேர்தலைத்தொடர்ந்து நடைபெறவுள்ள முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது பொதுமக்கள் பார்வைக் கூடம் திறக்கப்படமாட்டா தென அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உதவி செயலாளர் நாயகம் நீல் இத்த வெலவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு –

'புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பொதுமக்களை நாடாளுமன் றததுக்கு அனுமதிக்கத் தீர்மானித்துள்ளோம். இதே வேளை நாடாளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள், தற்போது இணைய முறைமை ஊடாகத் தங்களது சுய தகவல்களை வழங்கியுள்ளனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 'மஹிந்தவுக்கு முடியாது' புத்தகத்தை எழுதிய எஸ்.பி.க்கு பெரும் சிக்கல்!



பதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர், அன்றைய பொதுத் தேர்தலுக்கு முன்னர் மஹிந்தவுக்கு முடியாது என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வெளியிட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தற்போது மிகவும் கவலைக்குரிய நிலைமையை எதிர்நோக்கி வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த எஸ்.பி.திஸாநாயக்கவை அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து, நல்லாட்சி தேசிய அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் நியமித்தார்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்த பின்னர், எஸ்.பி.திஸாநாயக்க உட்பட 15 பேர் கொண்ட அணியினர் எதிரணியில் இணைந்து செயற்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.பி. திஸாநாயக்க, விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்றாவது இடத்தை பிடித்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

எனினும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சர் பதவியோ, ராஜாங்க அமைச்சர் பதவியோ எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு வழங்கப்படவில்லை என்பதுடன் அவருக்கு நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பதவி மட்டுமே வழங்கப்பட்டது.

எஸ்.பி. திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரி – ரணில் அரசாங்கங்களில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்த அரசியல்வாதி என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டிலிருந்த 494 பேர் சனியன்று நாடு மீண்டனர்!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையில் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 494 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) ஒரு குழுவினரும் இன்று அதிகாலை ஒரு குழுவினரும் இவ்வாறு மத்தல மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங்களை வந்தடைந்தனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 34 பேரும், கட்டாரில் இருந்து 22 பேரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று ஓமானில் இருந்து 150பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 288 பேரும் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறுவருகைதந்துள்ள அனைவருக்கும் பீ.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# அரசியலுக்கு சந்திரிகா மீள வரவே மாட்டாராம்!

## அவர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



அரசியலுக்கு மீண்டும் வரப்போவதில்லை. ஆனால் இலங்கை சுதந்திரக் கட்சியின் புதிய தலைவரை ஆதரிக்கத் தயாராக உள்ளார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விசேட காணொலி ஒன்றினை வெளியிட்டுள்ள அவர், சுதந்திரக் கட்சியை மீண்டும் ஒருங்கிணைத்து புதிய தலைவருடன் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்து, ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கான சுதந்திரக் கட்சியின் முடிவையும் அவர் கண்டித்தார்.

அத்தோடு ராஜபக்ஷக்கள் பின்பற்றும் அரசியலைத் தாம் ஒருபோதும் ஆதரிக்க மாட்டார் என்றும் இருப்பினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு நல்ல தலைவர் என்றும் சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

ஒரு நல்ல தலைவர் இல்லாததால் எதிர்க்கட்சிகள் இப்போது நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தது என்றும் சந்திரிகா குமாரதுங்க சுட்டிக்காட்டினார்.

# ஹெரோயின், கேரளா கஞ்சாவுடன் நாவலப்பிட்டியவில் மூவர் சிக்கினர்



நாவலப்பிட்டியவில் ஹெரோயின் மற்றும் கேரளா கஞ்சாவுடன் மூவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேகம – கல்குவாரி பிரதேசத்தின் வைத்தே நாவலப்பிட்டிய குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 530 மில்லி கிராம் ஹெரோ யின் மற்றும் 430 மில்லி கிராம் கேரளா கஞ்சா ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்கள் 25 – 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கந்தரோடையில் இரத்த தான முகாம்

விதையனைத்தும் விருட்சமே குழுமம் மற்றும் கந்தரோடை மக்கள் முன்னேற்ற இளைஞர் கழகம் இணைந்து நடாத்தும் மாபெரும் இரத்ததான முகாம் கந்தரோடை சுகாதார நலன்புரி நிலையத்தில் இன்றைய தினம் காலை 8 மணிமுதல் மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த இரத்தான முகாமுக்கு பங்களிப்பு செய்ய விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கங்கள் 0779849902 அல்லது 0773241755 உடன் தொடர்பு கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர்.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவர் மாட்டினர்

பொகவந்தலாவையில் இருவேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவரை பொகவந்தலாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்படி பொகவந்தலாவை, கொட்டியாகல தோட்டத்திலுள்ள தேயிலை மலையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் நேற்றுமுன்தினம் மாலையும், லொய்னோன் தோட்டத்தில் இவ்வாறான செயலில் ஈடுபட்ட மூவர் இன்று அதிகாலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அத்துடன், மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் மீடகப்பட்டுள்ளன. கைதானவர்கள் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 890 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) மாத்திரம் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய இரண்டு பேருக்கும், மாலைத் தீவில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும் மற்றும் துருக்கியில் இருந்து நாட்டுக்கு வந்த வெளிநாட்டவர் ஒருவருக்கும் இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்த 8 பேர் நேற்று வைத்தியசாலைகளில் இருந்து வீடு திரும்பியுள்ளனர். இதனையடுத்து, இந்த தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 666 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 211 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற னர். அத்தோடு கொரோனா தொற்று சந்தேகத்தில் 55 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, இந்த வைரஸ் தொற்றால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 118 பி.சி.ஆர். சோதனை இலங்கையில் இதுவரை முன்னெடுக்கப்பட்டது!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்காக இதுவரையில் ஒரு லட்சத்து 85 ஆயிரத்து 118 பீ.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கொரோனா பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) மாத்திரம் 1,120 பீ.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அந்த மையம் குறிப்பிட்டுள்ளது.

தேசிய செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, முப்படையினரின் கீழ் இயங்கி வரும் தனிமைப்படுத்தல் மையங்களில் இதுவரையில் 30 ஆயிரத்து 524 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

எனினும் இந்த மையங்களில் 4 ஆயிரத்து 756 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டவர்களில் மேலும் நால்வர் குணமடைந்து இன்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதன்படி, இதுவரை இரண்டாயிரத்து 870 பேர் வைரஸ் தொற்றிலிருந்து பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இரண்டாயிரத்து 890 பேரில் இன்னும் 209 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நாட்டில் வைரஸ் தொற்றினால் இதுவரை 11 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக் கழகங்கள் இன்று மீளத் திறப்பு!

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் இன்று முதல் மீளத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டன. பின்னர் பரீட்சைகளின் நிமித்தம் பல்கலைக்கழகங்கள், கட்டம் கட்டமாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சகல பல்கலைக் கழகங்களையும் இன்று முதல் மீளத் திறப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மேலும் சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீள முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பதிவுசெய்யப்படாத மாணவர்கள், பல்கலைக் கழகங்களுக்குச் செல்லுவதற்குத் தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுமேலும் தெரிவித்துள்ளது.

# கைதியைக் கும்பிடும் சிறை அதிகாரி

பாதாளக்குழு உறுப்பினரும் போதைப்பொருள் வர்த்தகருமான கஞ்சிபான இம்ரான் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூண்டுக்குள் செல்லும் சிறைச்சாலை அதிகாரியொருவர், கஞ்சிபான இம்ரானை வணங்கும் வீடியோ காட்சியொன்று தனக்குக் கிடைத்துள்ளதென, பாதுகாப்பு செயலாளர் கமல்குணரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் இவ்வாறான குற்றவாளிகளின் செயற்பாடுகளை முடக்க எவ்வளவு முயற்சித்தாலும், சில சிறைச்சாலை அதிகாரிகளின் ஒத்துழைப்பு இந்த குற்றவாளிகளுக்குக்கிடைத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் மகத்தான ஆணையை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## 'மொட்டு'வின் நிறுவுநர் பஸில் கோரிக்கை



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள மகத்தான ஆணையை சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் இலங்கையின் திட்டமிடல் சேவை சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்களால் வழங்கப்பட்டுள்ள மகத்தான ஆணை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கே மக்கள் பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளனர்.

எனவே, அதற்கமைய, நாட்டின் அபிவிருத்தியில் தெளிவான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். விசேடமாக தொழிலாளர்களை மையப்படுத்தி கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

அபிவிருத்தியானது உட்கட்டமைப்பு மேம்பாட்டுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது. மக்களின் பங்களிப்புடன் விரிவான அபிவிருத்திச் செயற்பாட்டை நோக்கி நகர வேண்டும் – என்றார்.

## 'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின்

# தேசியப் பட்டியல் நியமனத்தில் இழுபறி: தேர்தல் ஆணைக்குழுவில் விசேட பேச்சு

'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பான இழுபறி நிலைமை தொடர்ந்து நீடித்து வருகின்றமையால் தேர்தல்கள் ஆணைக் குழுவில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மற்றும் புதன்கிழமைகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பாக அக்கட்சியின் முன்னாள் செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ தேரரினால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில், தமது கட்சியின் தேசிய பட்டியல் வேட்பாளராக தனது பெயரைக் குறிப்பிடுமாறு வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் கோரியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அக்கட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சபை கூடி விமலதிஸ்ஸ தேரரை குறித்த பதவியில் இருந்து நீக்கியதோடு, புதிய செயலாளர் ஒருவரையும் நியமித்தனர்.

இவ்வாறு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட செயலாளரின் கையெழுத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வேறு ஒருவரின் பெயர், எழுத்து மூலம் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், தேர்தல்கள் ஆணைக்குழு எந்தவொரு நபரின் பெயரை ஏற்றுக்கொள்ளவில்லை.

குறித்த பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியது.

அதற்கு சட்டமா அதிபர் திணைக்களம், இந்தப் பிரச்சினைக்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடாகவே தீர்வு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

அதற்கமையவே 'எங்கள் மக்கள் சக்தி' கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

# மத்தள விமான நிலையத்தில் மரக்கறி, பழங்கள் ஏற்றுமதி!

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாக உள்ளூர் மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான சிறப்பு திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய பொதுமுகாமையாளர் உபுல் கலன்சூரிய இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது, உள்ளூர் மரக்கறி மற்றும் பழங்கள் அடங்கிய முதல் விமானம் இன்று காலை மத்தள விமான நிலை யத்திலிருந்து ஓமான் மஸ்கட் விமான நிலை யத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.

அதாவது, இலங்கையில் பயிரிடப்பட்ட 3 ஆயிரத்து 371 கிலோ மரக்கறிகள் மற்றும் பழங்களை சலாம் ஏயர்வேஸின் ஓ.வி – 1432 என்ற விமானத்தின் ஊடாக மத்தள விமான நிலையத்திலிருந்து ஓமானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சலாம் ஏயர்வேஸின் ஓ.வி – 1432 என்ற குறித்த விமானம், 150 பயணிகளுடன் மத்தள சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத் தளபதியைச் சந்தித்தார்!



இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சையிட் மக்சுமுல் ஹக்கீமுக் கும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஜுந்த உலுகேதென்னவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை கடற்படை தலைமையகத் தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பதவிக் காலம் நிறைவடைந்தமையை முன்னிட்டு பாதுகாப்பு ஆலோசகர் கொமடோர் சையிட் மக்சுமுல் ஹக்கீம், கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஜுந்த உலுகேதென்னவை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கை கடற்படைக்கு அளித்த ஒத்துழைப்புக்காக, பங்களாதே; பாதுகாப்பு ஆலோசகருக்கு நன்றி தெரி வித்ததுடன் அவரின் எதிர்கால நடவடிக் கைகளுக்கும் கடற்படைத் தளபதி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சந்திப்பை நினைவு கூறும் வகையில் பங்களாதேஷ் உயர்ஸ் தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோ சகருக்கு நினைவு சின்னங்களும் வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் கந்தசாமி ஆலயத் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

**நல்லூர் ஆலயத்தில் தினமும் அதிகாலை 4.30 மணிக்கு இடம்பெறும் பள்ளியறைப் பூஜையின் போது பாடப்படும் திருநல்லூர்த் திருப்பள்ளியெழுச்சி (எண்சீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)**

செங்கதிர்ச் செல்வனும் குணதிசை எழுந்தான்
செறியிருள் அகன்றது சிறந்தது வானம்
பொங்கருள் நான்மறை அந்தணர் புகன்றார்
புள்ளினம் ஆர்த்தன போந்தனர் அடியார்
திங்களின் பிறையணி சிவன்தருஞ் செல்வா
திருநல் லூருறை திருமுரு கோனே
எங்களை ஆட்கொளும் இன்னருட் கடலே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

செந்தமிழ் இசையெனச் சேவல்கள் கூவும்
தேமலர் சோலையில் தீங்குயில் பாடும்
மந்திர கீதங்கள் வந்தலை மோதும்
மங்கலச் சங்கொலி வானுல கேகும்
சிந்தையில் இனியவர் செம்பொருள் காணும்
திருநல் லூருறை திருமுரு கோனே
எந்தைநின் திருவடி இறைஞ்சிட விழைந்தோம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

மூவரின் முந்திய முழுமுதற் பொருளே
முனிவர்கள் காட்சியில் மூண்டெழுஞ் சுடரே
ஆவலின் அழுதனர் தொழுதனர் அடியார்
ஆண்டருள் புரியென அழைத்தனர் கேளாய்
தேவரிற் செம்மைகொள் துறவிகள் சேரும்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏவரும் ஏத்திடும் பேறெமக் கருள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பொங்கெழின் மாலையர் பூவினர் ஒருபால்
போற்றிசெய் அருச்சனைப் பொருளினர் ஒருபால்
தங்கொலி முழவினர் குழலினர் ஒருபால்
தமிழ்மறை யாழுடன் சாற்றினர் ஒருபால்
தெங்கிளங் கமுகுடன் செறிந்திடும் பொழிலார்
திருநல் லூருறை திருமுரு கோனே
எங்களை ஏற்றருள் ஈந்திடுந் தலைவா
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

விழித்திடும் நுதலினன் வீறொளிர் விருந்தே
விண்ணவர் போற்றிடும் விளங்கொளிப் பிளம்பே
கொழித்திடுந் தேன்சுவைக் கொழுந்தமிழ்ப் புலவா
குறமகள் காதலிற் குழைந்திடுங் குகனே
செழித்திடும் செந்நெலும் செல்வமும் ஓங்கும்

திருநல் லூருறை திருமுரு கோனே
இழித்திடும் பிறப்பினை ஒழித்தமை ஆள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பாற்கடற் பாயலிற் பள்ளிகொள் வோனும்
பயன்கொழு நான்மறை பகர்ந்தருள் வோனும்
மாற்றரும் மறலியும் வானவர் வோனும்
மாதவச் செல்வரும் வாழ்ந்திடும் அரசே
சேற்றினிற் சேல்புரள் கழனிகள் ஓங்கும்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏற்றெமைப் புரந்துயர் வீட்டுல கருள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே



## எம்மைத் தேற்றடா!

ஈர நல்லையின் வீர ஷண்முகா!
இன்றிடர் களைந் தெம்மை நோக்கடா!
பாரை மாய்த்திடும் பாவ நோயினை
பாடை யேற்றடா...பஸ்பமாக்க வா!
வேரிலே விழும் வேதனை இடர்
வெட்டி வீழ்த்தடா! மேன்மை சேர்க்க வா!
தேரி லேறடா...! தேகம் யாவிலும்
தீமை ஓட்டி எம் திக்கை மீட்க வா!

தொற்றினால் பிணி சூழ்ந்து வந்தது.
தூரத் தூர நாம் நிற்க வைக்குது.
தொற்றி நம் திசை சூழ் தனிமையில்
சோர வைத்தது. வாயை மூடி யாம்
சுற்றச் செய்தது. இந் நிலமையால்
சொர்க்கம் கொண்டரும் நல்லை நாதனுன்
அற்புத விழா கூட அன்றுபோல்
அன்றியே... கட்டுப் பாடு கண்டது!

என்ன ஆகுமோ? என்ன நேருமோ?
என்று ஏங்கி நாம் உன்னைக் காணவே
நின்றுளோம்... எழு! நேர்த்தி தீர்க்கவும்
நெருக்கும் தொற்றிடர் நீற வேல் விடு!
மின்னல் போலத் தேர் ஏறி வந்திடு!
விழிகளால் அயல் தொற்று நீக்கிடு!
இன்று போல் - நிலை - என்றுமே இனி
இல்லை என்றிடு! எம்மைத் தேற்றிடு!

- கவிஞர் த.ஜெயசீலன் -

தமிழ்க் குரல்
thamilkural.net
"மொழியால் ஒரு விதி செய்வோம்"
info@thamilkural.net
0212 284 348
முகவரி: பாரதிபுரம், கிளிநொச்சி.

திருமால் மருகா தினமும் அருட்காட்சி தந்து நல்லதெல்லாம் நடக்க அருள் தா குகனே
யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான புடைவை நிறுவனங்களின் பழம் பெரும் நிறுவனம்
சிவகணேசன் புடவையகம்
வண்ணத் துணிவகைகளும்
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்
Sivakaneshan Textiles
நவநாகரிக நங்கையர்களை கண்ணைக் கவரும் சாறிகள்,
கண்கள் மின்னும் சுடிதார் வகைகள், சிறியோர்
பெரியோர்களுக்கேற்ற நாகரிக ஆடை அணிகள்
இல. 41, பெரிய கடை, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 222 2063

# நல்லூர் கந்தசாமி ஆலயத் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

**தொல்லை வினைதீர்க்கும் நல்லைக் கந்தனே முருகா
இல்லை யெனாது வரமீந்தருளும் குகனே ஷண்முகா
கல்லை யொத்த (என்) மனமும் கசிந்துருகக் காட்சி தரும்
நல்லை யம்பதியுறையும் ஞானவடி வேலனே சரணம்!**



ஈழத் தமிழர்களின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற - வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவிலில் இன்று இரதோற்சவ நாள். அழகன் முருகன் ஆறுமுகப் பெருமானாக எழுந்தருளி வந்து வேண்டும் வரம் தந்து அருள் பாலிக்கின்றான். நல்லையம்பதியிலே எம்பெருமான் ஆறுமுகங்களோடு ஆரோ கணித்து வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அற்புத, ஆனந்த கோலாகலக் காட்சியைக் காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ்செய்திருக்க வேண்டும்.

வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமான் ஆறுமுகனாக வரும் அழகு கண் கொள்ளாக் காட்சியாகும். அடியார்க்கருளும் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் வீற்றிருந்து திருவீதி வலம் வருகின்ற அற்புதக் காட்சி காணு தற்கரியது. வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய தமிழ்க் கடவுள் முருகனுக்கு எடுக்கப்படும் நல்விழாப் பொலிவு காண இரண்டு கண்கள் போதாது.

நல்லூர் வடம் பிடித்தால் - சொர்க்கத்தில் இடம் பிடிக்கலாம் என்று ஒரு நம்பிக்கை உண்டு. அதாவது நல்லையம்பதியிலே எழுந்தருளும் எம்பெருமானின் தேர் வடம் பிடித்து இழுப்பவர்களுக்குச் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்பது அதன் பொருள்.

இரத்தோற்சவம் என்பது இறைவனின் பஞ்சகிருத்தியங்களிலே அழித்தல்தொழிலைக்குறிப்பதாகும். அதாவது நாம் செய்கின்ற - செய்த பாவங்களை எல்லாம் அழித்தொழித்து அருள் புரிகின்ற நிகழ்வாகும். அடியார்கள்அனைவரும்முருகனுக்கு அரோஹரா! நல்லூர்க் கந்தனுக்கு அரோஹரா! என்றுகோஷம்எழுப்பிய வண்ணம் கோயிலை வலம் வந்து வழிபாடாற்றி மகிழும் புனித புண்ணியத் திருவிழா இது.

நல்லூர் கந்தன், ஒரு அலங்காரப் பிரியன். அதனாலே தான் அவன் அலங்காரக் கந்தன் - என்றும் அழைக்கப்படுகின்றான். ஒவ்வொரு நாளும் விதவிதமான அலங்காரத்துடன் வெவ்வேறு வாகனங்களில் திருவீதி வலம் வருங்காட்சி அருள் மயமானது. தகதகக்கும் தங்க நகைகளாலும், மணம் மிக்க மலர் மாலைகளாலும் தெய்வீகப் பொலிவுடன் காட்சி தரும் அழகனைக் காணும் போது மெய்சிலிர்ப்பதைத் தவிர்க்க முடியாதிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் வேறு எத்தனையோ முருகன் கோயில்கள் இருப்பினும், நல்லூரில் மட்டும் அடியார்கள் நெருக்கியடித்துக் கொண்டு வருவதற்குக்காரணம்என்ன? இங்கு மூலஸ்தானத்தில்இருக்கின்றவேலின் அபார சக்தியே அதற்குக் காரணமாகும். நல்லூர்க் கந்தப் பெருமானுடைய தேர்த் திருவிழாவினைக் காண யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலாப்பக்கங்களிலிருந்தும் முருகன் அடியார்கள் நல்லூரை நோக்கி வருவார்கள். - முருகா!! முருகா!! - என்று பஜனை பாடிய வண்ணம் முருகன் அடியார்கள் உருகி நிற்கும் காட்சியை இங்கேயன்றி வேறு எங்குமே காண முடியாது.

முருகனின் இரத்தோற்சவ நாளான இன்று கந்தனைக் கைதொழுது, சிந்தித்து, வந்தித்துச் சேவித்து, உலகில் உள்ள எல்லோரும் நன்றே வாழ அருள்புரிய வேண்டுமென்று வணங்கி வாழ்த்தி நிற்போமாக!

- தெய்வத் தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரன் -





































# நல்லூர் கந்தசாமி ஆலயத் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

**தொல்லை வினைதீர்க்கும் நல்லைக் கந்தனே முருகா**
**இல்லை யெனாது வரமீந்தருளும் குகனே ஷண்முகா**
**கல்லை யொத்த (என்) மனமும் கசிந்துருகக் காட்சி தரும்**
**நல்லை யம்பதியுறையும் ஞானவடி வேலனே சரணம்!**



ஈழத் தமிழர்களின் அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற - வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவிலில் இன்று இரதோற்சவ நாள். அழகன் முருகன் ஆறுமுகப் பெருமானாக எழுந்தருளி வந்து வேண்டும் வரம் தந்து அருள் பாலிக்கின்றான். நல்லையம்பதியிலே எம்பெருமான் ஆறுமுகங்களோடு ஆரோ கணித்து வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அற்புத, ஆனந்த கோலாகலக் காட்சியைக் காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ்செய்திருக்க வேண்டும்.

வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமான் ஆறுமுகனாக வரும் அழகு கண் கொள்ளாக் காட்சியாகும். அடியார்க்கருளும் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் வீற்றிருந்து திருவீதி வலம் வருகின்ற அற்புதக் காட்சி கானு தற்கரியது. வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய தமிழ்க் கடவுள் முருகனுக்கு எடுக்கப்படும் நல்விழாப் பொலிவு காண இரண்டு கண்கள் போதாது.

நல்லூர் வடம் பிடித்தால் - சொர்க்கத்தில் இடம் பிடிக்கலாம் என்று ஒரு நம்பிக்கை உண்டு. அதாவது நல்லையம்பதியிலே எழுந்தருளும் எம்பெருமானின் தேர் வடம் பிடித்து இழுப்பவர்களுக்குச் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்பது அதன் பொருள்.

இரத்தோற்சவம் என்பது இறைவனின் பஞ்சகிருத்தியங்களிலே அழித்தல்தொழிலைக் குறிப்பதாகும். அதாவது நாம் செய்கின்ற - செய்த பாவங்களை எல்லாம் அழித்தொழித்து அருள் புரிகின்ற நிகழ்வாகும். அடியார்கள்அனைவரும்முருகனுக்கு அரோஹரா! நல்லூர்க் கந்தனுக்கு அரோஹரா! என்று கோஷம் எழுப்பிய வண்ணம் கோயிலை வலம் வந்து வழிபாடாற்றி மகிழும் புனித புண்ணியத் திருவிழா இது.

நல்லூர் கந்தன், ஒரு அலங்காரப் பிரியன். அதனாலே தான் அவன் அலங்காரக் கந்தன் - என்றும் அழைக்கப்படுகின்றான். ஒவ்வொரு நாளும் விதவிதமான அலங்காரத்துடன் வெவ்வேறு வாகனங்களில் திருவீதி வலம் வருங்காட்சி அருள் மயமானது. தக தகக்கும் தங்க நகைகளாலும், மணம் மிக்க மலர் மாலைகளாலும் தெய்வீகப் பொலிவுடன் காட்சி தரும் அழகனைக் காணும் போது மெய்சிலிர்ப்பதைத் தவிர்க்க முடியாதிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் வேறு எத்தனையோ முருகன் கோயில்கள் இருப்பினும், நல்லூரில் மட்டும் அடியார்கள் நெருக்கியடித்துக் கொண்டு வருவதற்குக் காரணம் என்ன? இங்கு மூலஸ்தானத்தில் இருக்கின்ற வேலின் அபார சக்தியே அதற்குக் காரணமாகும். நல்லூர்க் கந்தப் பெருமானுடைய தேர்த் திருவிழாவினைக் காண யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலாப்பக்கங்களிலிருந்தும் முருகன் அடியார்கள் நல்லூரை நோக்கி வருவார்கள். - முருகா!! முருகா!! - என்று பஜனை பாடிய வண்ணம் முருகன் அடியார்கள் உருகி நிற்கும் காட்சியை இங்கேயன்றி வேறு எங்குமே காண முடியாது.

முருகனின் இரத்தோற்சவ நாளான இன்று கந்தனைக் கைதொழுது, சிந்தித்து, வந்தித்துச் சேவித்து, உலகில் உள்ள எல்லோரும் நன்றே வாழ அருள்புரிய வேண்டுமென்று வணங்கி வாழ்த்தி நிற்போமாக!

- தெய்வத் தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரன் -

Unity Pc Systems
Computer Sales, Repairs, Service & Maintenance
CCTV Installation & Net Working
Northway Family Mart
No.184 Pranesvara Junction, Thirunelvely, Jaffna
The Lemon Tree
INDIAN VEG RESTAURANT
No 369, Point Pedro Road, Nallur,
0760642983
ஹரன் Karan Textiles
021 222 2697
இளவரசி ELAVARASI TEXTILE
HIKVISION MEGA STORE CCTV INSTALLATION
TEL 077 473 60 57 077 287 18 41 077 899 29 23
164, palay Road, thirunelvely, jaffna
hikvisionmegastore@gmail.com
Hot Line -021 222 7126
waves Authorised Distributor
Enjoy your secure Life
RAM SECURITY SYSTEM
NO 320, Point Pedro Road, Nallur, jaffna
கிருபா லேனர்ஸ் KIRUBAA LEARNERS
0777 225 292
Hotline 0777 225 292 0714 546 960 021 222 4353
kirubaalearners@gmail.com
BRENS FASHION PLANET
பிரென்ஸ் பஷன் பிளானட்
Mens & Womens Wears
Vayuputhraa Phone Shop வாயுபுத்ரா
Phone Shales & Repairing
ஏசியன் Asian Textiles
SUN TRAVELS
Point Pedro Office T.P: 076 1368548
Kovil Road, Kailasappillaiyar Koviladi, Jaffna.
ரூபி நகை மாடம்
PCP PC PARK
Hot Line - 077 777 1345
KANESAN STOES கணேசன் ஸ்ரோர்ஸ்
Wholesale & Retail Dealers in TEXTILES
YARL SMART Water solution (Pvt) Ltd
FREE WATER TESTING FREE INSTALLATION
No. 341 K.K.S Road, Jaffna. 021 430 0044, 076 666 5267
SAM LANKA Direct Importers & Distributors
021 222 1002 0777 465 848 0778 209 424
367, Navalar Road, Illupaiyady Junction, Jaffna
info.samlanka@gmail.com

# நல்லூர் கந்தசாமி ஆலயத் தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்





## பேதலிக்கும் அடியவரைப் பேணிடுவாய் முருகையா!

நல்லூரான் தேரிழுக்க நாடெல்லாம் வந்திருக்கும்
எல்லையில்லா மகிழ்வுடனே எல்லோரும் வடம்பிடிப்பார்
அல்லலினை அகற்றுவென அடியார்கள் வேண்டிடுவார்
நல்லநிலை அகன்றதனால் நாட்டுமக்கள் கலங்குகிறார்!

தேரென்று சொன்னாலே ஊர்முழுக்கக் கூடிநிற்கும்
யார்யாரே வருவார்கள் தேரிழுத்துத் தரிசிப்பார்
ஊர்முழுக்க ஆவலுடன் ஒன்றுகூடி வந்துநின்று
தேரிழுக்க முடியாமல் திணறுகிறார் இவ்வருடம்!

காவடிகள் வீதியெலாம் கணக்கின்றி வந்துவிடும்
காளையரும் கன்னியரும் களிப்புடனே குவிந்திடுவார்
குழந்தைகளின் குதூகலத்தால் கோவில்வீதி களைகட்டும்
கோவில்வீதி கட்டுப்பாட்டில் தேரோட்டம் நிகழ்கிறதே!

வாய்கட்டு கைகட்டு வயிற்றையும் கட்டென்றார்
வாழ்வெல்லாம் சுகமாக வாழ்ந்திடலாம் எனவுரைத்தார்
எதையுமே கேட்காது எப்படியோ நாம்நடந்தோம்
வாய்கட்டி கையட்டி வகையறியா நிற்கின்றோம்!

தேரேறி வருங்குமரா திருவருளைத் தந்திடுவாய்
ஊரெல்லாம் உனையணுகி உவந்தேற்ற விரும்புகிறார்
பேரரக்கர் பெருந்துயரை வேரோடு அழிந்தவனே
பேதலிக்கும் அடியவரைப் பேணிடுவாய் முருகையா!

நல்லூரான் தேர்காண நாளெண்ணிப் பலரிருந்தார்
நல்லூரில் பண்ணிசைக்க பலபேர்கள் காத்திருந்தார்
அத்தனையும் நிறைவேறா ஆக்கிவிட்ட காலமதை
அகற்றிடுவாய் முருகையா அடிபணிந்து இறைஞ்சுகிறோம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண், ஆஸ்திரேலியா


திருமணம் ,பூப்புனித நீராட்டு விழா , பிறந்தநாள் ,
மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு



திவ்ய மஹால்
இ 1001 வண்ணார்பண்ணை
கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
021 222 10 22



செல்வ மஹால்
1229 பூனாறி மரத்தடி
கே.கே.எஸ் வீதி யாழ்
021 221 97 79



செல்வ பலஸ்
10 ,12 பூனாறி மரத்தடி கே.கே. எஸ் வீதி ,
யாழ்ப்பாணம் 021 222 81 23

உங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து வைபவங்களுக்கு சிறந்தமுறையில்
உணவு தயாரித்து வழங்கப்படும்
தொடர்புகளுக்கு 0777 61 41 374






551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு -
021 4927782 / 076 740 3814



விக்கி லேணர்ஸ்
அரச அங்கிகாரம் பெற்ற
முதற்தர சாரதி பயிற்சி
பாடசாலை
Hot 0778308360




சுன்னாகம் 0773810444
268 , k.k.s . றோட் யாழ்ப்பாணம் 0765360444
புத்தூர் 0771677844
மானிப்பாய் 0772918444
பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி
யாழ்ப்பாணம் (தலைமை காரியாலயம்) 0767768444




சாவகச்சேரிப் பகுதியில்

# ரயிலில் மோதுண்டு ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக 16

சாவகச்சேரிப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் இன்று அதிகாலை சாவகச்சேரி, சங்கத்தானை ரயில் கடவையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலுடன் சங்கத்தானை பகுதியில் தொலைபேசியில் உரையாடியபடி, தண்டவாளத்தைக் கடந்து செல்ல முற்பட்ட ஒருவர் மோதுண்டு கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்த நபர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தண்டவாளத்திலிருந்து வெளியேற முயன்ற போதும், அவரது கால் தண்டவாளத்தில் சிக்கியுள்ளது. இதனால் அவரது காலொன்று துண்டிக்கப்பட்டது.

தென்பகுதியைச் சேர்ந்த நபரே இந்த விபத்தில் சிக்கியுள்ளார். உடனடியாக அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் தேர்த் திருவிழாவில் பெருந்திரளாக கூடாதீர்கள்!

## ஆலய நிர்வாகத்தினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 16

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசாமி கோவிலின் இரதோற்சவ நன்நாளில், ஆலயச்சூழலில் பக்த அடியார்கள் ஒரே நேரத்தில் பெருந்திரளாக க் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தேவஸ்தானத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவத்தின் இரதோற்சவ தினமாகும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனாப் பெருந்தொற்று பரவல் அபாயம் காரணமாக, சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எம்பெருமானின் அருளைப் பெற்றுய்வதற்கு ஆலய நிர்வாகத்தினால் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தேவஸ்தானத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

தனி மனித இடைவெளியைப் பேணியும், முகக் கவசங்கள் அணிந்தும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கொள்ளுங்கள்.

எம் பெருமானின் இரதோற்சவ தினத்தன்று அதிகாலை முதல் பிற்பகல் 2 மணி வரை சண்முகப் பெருமானைத் தாராளமாகத் தரிசிக்கலாம்.

எனவே, அடியவர்கள் தயவு செய்து சிறு குழந்தைகளையும், வயதானவர்களையும் கோவிலுக்கு அழைத்து வருவதைத் தவிருங்கள். அவர்கள் வீட்டில் இருந்தவாறே எம் பெருமானைத் தியானத்தில் தரிசனம் செய்யுங்கள்.

ஒரே நேரத்தில் அனைவரும் ஒன்று கூடாமல், வெவ்வேறு நேரங்களில் கோவிலுக்கு வருகை தந்து சண்முகப் பெருமான் - ஆனந்தக்கூத்தன் தரிசனங் கண்டு, அவன் குஞ்சிதபாத சேவை கண்டு இக, பர சௌபாக்கியம் அடைவீர்களாக! சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, நல்லூர் ஆலயப் பணியாளர்களுக்கும், தொண்டரகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள்.

நல்லூர்க் கந்தப் பெருமானுடைய அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும் - என்றுள்ளது.

# '19' ,'13' ஆகியவற்றை நீக்குவதற்கு முற்போக்குக் கூட்டணி எதிர்ப்பு!

கொழும்பு, ஓக 16

அரசமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்களை முழுமையாக நீக்குவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி கடும் எதிர்ப்பை வெளியிடும் என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் 28 பேர் இடம்பிடித்துள்ளனர். இதில் மலையக தமிழருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை அமைச்சரவையில் மலையக தமிழருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது. இம்முறை அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது.

அதேபோல் புத்தசாசனத்துக்கு தனி அமைச்சொன்று இருக்கும் நிலையில், ஏனைய மதங்களுக்கான அமைச்சுகள் நீக்கப்பட்டு சமய விவகார அமைச்சென உருவாக்கப்பட்டு அவை சார்ந்த திணைக்களங்கள் பிரதமரின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டும். அத்துடன் சில அமைச்சுகள் பொருத்தமற்ற விதத்தில் வழங்கப்பட்டுள்ளன.

19 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும் என அரச தரப்பில் கூறப்படுகின்றது. அதனை முழுமையாக நீக்குவதற்கு இடமளிக்கமாட்டோம். வேண்டுமானால் திருத்தங்களை மேற்கொள்ளலாம். 13 ஆவது திருத்தச்சட்டமானது சிறுபான்மையின மக்களுக்காக உருவானது. அதில் கைவைத்தால் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்.

தமிழ் முற்போக்கு கூட்டணியாக சில விட்டுக்கொடுப்புகளை செய்து பயணித்ததாலேயே 100 வீத வெற்றி கிடைத்தது.வருகின்ற தேர்தல்களிலும் முற்போக்கு கூட்டணியாகவே முடிவுகளை எடுப்போம். எதிரணியில் இருந்தாலும் எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அதற்கு எதிராகவும் நீதிக்காகவும் உரத்து குரல் எழுப்புவோம் - என்றார்.

# '13' ஒழிக்கப்படுவதை இந்தியா அனுமதிக்காது

## கூறுகிறார் கருணாகரம் எம்.பி.

மட்டக்களப்பு, ஓக 16

13 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாது செய்யும் அரசாங்கத்தின் செயற்பாட்டை இந்தியா ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்த சரத் வீரசேகர, 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

இவர் மடத்தனமான அரசியல் கருத்துகளை கூறியுள்ளார். 13ஆவது திருத்தச் சட்டம் பல தியாகங்களுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். அதிகாரங்கள் பகிரப்படும்போது மாகாணங்களுக்கு முறைமையில்லாமல் பிரதேசசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவது என்பது தொடர்பில் இவர்கள் சிந்திக்கவேண்டும்.

அதற்கு மேலாக இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோரினால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது, ராஜீவ் காந்தி, கடற்படை உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் வாங்கிக்கொண்டு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

எனவே, 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படும்போது அதனை இந்தியா பார்த்துக்கொண்டிருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும்போது நிச்சயமாக இந்தியாவின் தலையீடு இருக்கும்.

13ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக இந்த நாட்டில் அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்து, புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான நியாயமான, அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடிய ஒரு தீர்வினைக் கொண்டு வரமுடியும் - என்றார்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

ஹொரவபொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஸ்னகவெவ பிரதேசத்தில், காட்டு யானை தாக்கியதில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

ரஸ்னகவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு பிரியாணி விருந்து வைத்தார் ரணில்

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு கட்சித் தலைமையைகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்றது.

சிநேகபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்குப் புரியாணியும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் முடிவடையும் வரை தானே தலைமைப் பதவியில் நீடிப்பார் என ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

கட்சித் தலைமைப் பதவியில் நீடிப்பதற்கே ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார். எமக்குப் பிரியாணியும் வழங்கினார். ஆனால், நான் வாங்கவில்லை. அவர் தலைமைப் பதவியில் இருந்தால் மாகாண சபைத் தேர்தலில் நாம் போட்டியிடமாட்டோம் என்று கூட்டத்தில் பங்கேற்ற சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# யானை தாக்கி ஒருவர் மரணம்

ஹொரவபொத்தான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரஸ்னவெவ பகுதியில் யானை தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அறுபது வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ரணிலுடனான முறுகல் நிலையையடுத்து செயற்குழுக் கூட்டத்தை தவிர்த்தார் அகில

கொழும்பு, ஓக 16

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கலந்து கொள்ளவில்லை.

இந்தச் செயற்குழுக் கூட்டம் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அகிலவிராஜ் காரியவசத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையை அடிப்படையாகக் கொண்டே அவர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என்று அகில விராஜ் ஊடகங்களிடம் கூறியமை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க, கடுமையாக அவரைச் சாடினார் என்று தெரியவருகின்றது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு வழங்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் பேசப்படுகின்றது. சாகல ரத்நாயக்க, மிக நீண்டகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை எதிர்பார்த்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 23 ஆம் நாளான நேற்று, மாலை உற்சவத்தின் போது தங்க இடபத்தில் முருகப் பெருமானும், வெள்ளை இடபங்களில் வள்ளி - தேவசேனாபதி தேவியரும் எழுந்தருளி அருள்பாலிக்கும் காட்சி

படங்கள் : ஐ. சிவநாந்தன்

# யாழ். பல்கலைக்கு இன்று விடுமுறை

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர் தேர் திருவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்கள் உள்ளடங்கலாக இன்றுதிங்கட்கிழமை விடுமுறை வழங்கப் பட்டுள்ளது.

இன்றைய தினம் பல்கலைக்கழகத்தின் அனைத்து செயற்பாடுகளும் இடம்பெறாது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் பாதுகாப்பு குறைபாடுகள்; 48 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஓக.17

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கை களில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் தெரிவித் துள்ளது.

ஆங்கில நாளிதழொன்று கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தை மேற்கோள் காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கடந்த 9 வருடங்களில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 48 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவற்றில் 413 முறைப்பாடுகள் மாத் திரமே விசாரிக்கப்பட்டுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் கூறியுள்ளது.

அத்துடன், குறித்த 413 முறைப்பாடுகளில், 185 வழக்குகள் மாத்திரமே மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த வருடம் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து 305 முறைப்பாடுகள் பொலிஸில் முன்வைக்கப்பட் டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், அவற்றில் 296 முறைப்பாடு கள் குறித்த விசாரணைகள் தற்போது நிலுவையில் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சிறுவர் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான சட்டங்களை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று கணக் காய்வாளர் நாயக திணைக்களம் சுட்டிக்காட்டியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா இடைக்காலக் கணக்கறிக்கை தயார்!

கொழும்பு, ஓக 17

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமை யிலான அரசு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை நவம்பரில் முன்வைக்க வுள்ள நிலையில், அதற்கு முன்னதாக ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா வுக்கான இடைக்கால கணக்கறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவால் முன் வைக்கப்படவுள்ள இந்த இடைக்கால கணக்கறிக் கைக்கு அமைச்சரவை யின் அங்கீகாரமும் பெறப் படவுள்ளது.

இடைக்கால கணக் கறிக்கைக்குச் சபை அங்கீகாரம் வழங்கிய பின்னர் கடந்த ஒரு வருட காலமாக தாமதிக்கப்பட்டு வந்த 20ஆயிரம் கோடி ரூபா நிர்மாணங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு செலுத்தப்படும் என்றும், 1500 கோடி ரூபா பாட சாலை நிர்மாண நிலுவைக் கொடுப்பனவுகளுக்காக செலுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்தநிலையில் இடைக் கால கணக்கறிக்கையின் மூலம் முழு கொடுப்பனவு களையும் செலுத்த முடி யாது என்றபோதிலும் மக்கள் மத்தியிலான பணப்புழக்கத்துக்கு இது உதவும் என்று சமுர்த்தி மற்றும் நுண்நிதி ராஜாங்க அமைச்சர் ஹொரன் சேமசிங்க தெரி வித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த பெப்ரவரியில் அரசாங்கம் இடைக்கால கணக்கறிக் கையை சமர்ப்பித்த போதும் அதற்கு எதிர்க் கட்சி ஆதரவளிக்க வில் லை என்பது குறிப்பிடத் தக்கது.

# காத்திருக்கிறார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஓக 17

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை எந்தவகையில் குற் றங்களாக எடுத்துக்கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், ஊடகப் பேச்சாளர் பதவிநிலைகளிலிருந்து நீக்கும் முடிவுக்கு வந்தமை தொடர்பில் கட்சியின் மத்திய குழுவிடம் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் விளக்கம் கோரவுள்ளார்.

எனினும் பதவிகளிலிருந்து நீக்கியமை தொடர்பில் கையொப்பமிடப்படாத கடிதமே அனுப்பப்பட்டுள்ளதாகவும் உத்தியோகபூர்வ கடிதம் கிடைத்தவுடன் மேற்கண்டவாறு கேட்டு வி.மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருக்கு கடிதம் எழுதவுள்ளார் என்றும் அவரது தரப்புகள் தெரிவித்தன.

அத்தோடு யாழ். பல்கலைக்கழக கல் வியாளர்கள் பலர் சட்டத்தரணி வி.மணி வண்ணனுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். எந்தவொரு தீர்மானத்தையும் ஆற அமர யோசித்து எடுக்குமாறு அவர்கள் நேரில் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளரு மான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணி வண்ணனை அந்தப் பதவிகளிலிருந்து நீக்குவது என்று கடந்த வியாழக்கிழமை கூடிய கட்சியின் மத்திய குழு தீர்மானித்தது. இதனைக் கட்சியின் தலைவர் கஜேந்திரகு மார் பொன்னம்பலம் நேற்று உறுதிப்படுத் தினார்.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்று கட்சி எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமை, நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போது சிறு குழுக்களை அமைத் துச் செயற்பட்டமை மற்றும் புலம்பெயர் தேசத்தில் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர் என கட்சியால் அடையாளப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்புகளைப் பேணியமை போன்ற குற்றச்சாட்டுக்களே அந்தக் கட்சி யின் மத்திய குழுவால் வி.மணிவண்ண னுக்கு எதிராக முன்வைக்கப்பட்டு அவர் வகிக்கும் பதவிகளிலிருந்து நீக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, சட்டத்தரணி வி.மணி வண்ணனுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருக்கும் தீர்மா னத்தை ஒரு தரப்பு நியாயப்படுத்தும் அதே வேளை, கடந்த பொதுத் தேர்தலில் மாற் றத்தை விரும்பிய இளைஞர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலையை உருவாக்கியுள் ளது.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் முன் இன்று முதல் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட வைத்திய சாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி இன்று காலை ஒன்பது மணிக்கு மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை முன்பாக இடம்பெற உள்ளது. இன்று முதல் தீர்வு கிடைக்கும் வரை தொடர்ச்சியாகச்சுழற்சி முறையில் இந்தப்போராட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

பல்வேறு வகையிலும் பின்தங்கிக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட வைத்தியசாலை சீராக இயங்காததால் மக்கள் தொடர்ச்சியாக எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படாததன் பின்னணியில் இந்தப் போராட்டம் இன்று முதல் தொடர் போராட்டமாக இடம்பெற உள்ளது.

எனவே நாளை காலை 9 மணிக்கு இடம்பெற இருக்கின்ற மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்திலே முல்லைத்தீவு மாவட்டத்தின் உடைய பொதுமக்கள் வர்த்தக சங்கத்தினர் தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சமூக ஆர்வலர்கள் நலன்விரும் பிகள் அனைவரையும் கலந்துகொண்டு மாவட்டத்தின் அபி விருத்திக்கு மாவட்ட வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அனைவரும் ஒன்று திரளுமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது


கடைகள் வாடகைக்கு தேவை

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகரப் பகுதிகளில் கடைகள் வாடகைக்கு தேவை

தொடர்புகளுக்கு - 076 740 3814

நிரந்தர வேலைவாய்ப்பு

வட பகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவன மான NFlash Super Detergent புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம். முல் லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய நபர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத் தேர்வு 10முதல் A/L வரை மூன்று மாத பயிற் சியின் போது 15000 வருமானம் பயிற்சியின் பின் 40000/= மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

மேலதிக சேவைகள் - EPF, ETF, Medical, ஆங்கிலம் சிங்களம் கற்பதற்கான வசதி பதவி வெற்றிடங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

607a, KKS Road, Jaffna

தொடர்புகளுக்கு - 021 222 2855, 0775521626

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அதிபர் டிரம்புக்கு எதிராகப் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோபிடன் தம்முடைய துணை ஜனாதிபதி வேட்பாளராக செனட்டர் கமலா ஹரிஸை அறிவித்திருக்கின்றார். 56 வயதுடைய கலிபோர்னியா மாநில செனட்டரான கமலா ஹரிஸ், அந்த மாநிலத்தின் ஒக்லண்ட்டில் பிறந்தவர். அவரின் தாயார் கோபாலன் சியாமளா தமிழ்நாடு சென்னையைச் சேர்ந்தவர். மார்பகப் புற்றுநோய் நிபுணர். தந்தையார் ஹரிஸ் ஜமேக்காவைச் சேர்ந்தவர். பொருளியல் பேராசிரியர். தாய் வழியில் ஆசிய அமெரிக்கராகவும் தந்தை வழி மூலம் ஆபிரிக்க அமெரிக்கராகவும் அவர் கணிக்கப்படுகின்றார். தந்தையின் தொடர்பு காரணமாக கறுப்பு பப்ரிஸ்ட் தேவாலயத்திற்கும் தாய் வழி பண்பியல் பால் இந்துக் கோவில்களுக்கும் தவறாமல் சென்றுவருபவர் கமலா ஹரிஸ். தனது தாய் வழி உறவினர்களைச் சந்தித்துப் பழகுவதற்காகத் தமது இளைய சகோதரி மாயாவுடன் அடிக்கடி அவர் சென்னை வந்து திரும்புவார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்கத் துணை ஜனாதிபதி எங்கட கமலா அக்காவோ?

**அன்புள்ள கமலா அக்காவிற்கு,**

உங்களுக்குத் தமிழ் தெரியுமா தெரியாதா என்று எனக்குத் தெரியாது. நீங்க பச்சைத் தமிழிச்சியா இல்லையா என்று கூட எனக்குக் கொஞ்சமும் தெரியாது.

ஆனாலும் உங்கட பெயர் தமிழ்ப் பெயரைப் போல இருப்பதால், நீங்க தமிழ் என்று நினைத்து இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஏனென்றா அக்கா, நாங்க சின்னனில் இந்திரா காந்தி கூட தமிழ் என்று யோசிச்சாக்கள் தானே.

நேற்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் Joe Biden இன் துணை ஜனாதிபதி வேட்பாளராக நீங்கள் அறிவிக்கப்பட்டதும், ஏனோ எங்களுக்கு எங்கிருந்தோ வந்த ஒரு புளுகம் புகுந்து கொண்டதுக்கு உங்கட கமலா என்ற அழகிய தமிழ்ப் பெயர் தான் காரணம்.

இன்னும் கொஞ்ச நாள்களில், கமலா ஒரு சிங்களப் பெயர், நீங்கள் சிங்களம் என்று ஞானசார தேரர் எங்களோட சண்டைக்கு வருவார்.

கதிர்காமக் கந்தனை சிங்களவனாக மாற்றியது போல, கன்னியாவையும் இராவணனையும் தங்கட என்று தம்பட்டம் அடிக்கும் சிங்கள பௌத்தப் பேரினவாதம், கமலாக்காவையும் வெள்ளை வானில் தூக்கி தங்கட ஆள் என்று கொண்டாடத் தான் போகுது.

உங்கட அம்மாவும் தமிழ், உங்கட பெயரும் தமிழ், நாங்களும் தமிழ் என்றபடியால் மட்டுமே நீங்க எங்களைக் கவனிப்பியலோ தெரியாதக்கா.

ஆனால், உலகமே வியக்கும் வண்ணம் கட்டுக்கோப்பான ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்தி, ஓர் இருபது வருடங்களுக்கு முன்னம் வெற்றியின் விளிம்பில் நின்ற எங்களின் இன்றையை கையறு நிலையைக் கவனிப்பார் யாருமிலர் அக்கா.

பேசித் தீர்க்கலாம் வாங்கோடா என்று ஊரூராக க் கூட்டிப் போன நோர்வேக்காரனின் சிலமனையும் காணோம், அவங்களோடு கூட்டுக் களவாணிகளாகச் சேர்ந்த உங்கட அமெரிக்காவும், ஜப்பானும், ஐரோப்பிய ஒன்றியமும் நாங்கள் யுத்தத்தில் தோற்றதோடு எங்களைக் கைவிட்டு விட்டது உங்களுக்கு தெரிஞ்சிருக்கும்.

கமாலாக்கா, உங்களுக்கு எங்கட உண்மையான பிரச்சினை என்னென்று தெரியுமோ தெரியாது, தெரிய முயற்சிக்கப் போறியலோவும் தெரியாது.

உதுக்க ஆகப் பெரிய பகிடி என்னென்றால், எங்கட உண்மையான பிரச்சினை என்னென்று எங்களுக்கே சரியா தெரியாமல் போய்ட்டு, உண்மையை சொல்லப் போனால் தெரியாமல் ஆக்கிட்டாங்கள்.

எங்களுக்கே எங்கட பிரச்சினை என்னென்று தெரியாமல் இருக்கேக்க, உங்களுக்கு எங்கட உண்மையான பிரச்சினையை என்னென்று நாங்கள் விளங்கப் படுத்தப் போறம்?

எங்கட ஊர் பெடியளுக்கே எங்களால எங்கட பிரச்சினையை சரியா விளங்கப்படுத்த ஏலாமல் இருக்கிற சீத்துவத்தில, வொஷிங்டனில் இருக்கிற உங்களுக்கு எப்படி அக்கா விளங்க வைக்கிறது?

ஒருத்தனை கேட்டால் எங்களுக்கு தனி நாடு கிடைச்சால் எல்லாம் சரியாகிடும் என்றுறான். இன்னொருத்தனோ இல்லையடாப்பா தனித் தேசம் தான் வேணும் என்றுறான்.

சரியடாப்பா, தனி நாட்டுக்கும் தனித் தேசத்துக்கும் என்னடாப்பா வித்தியாசம் என்று கேட்கப் போனால், இருத்தி வைச்சு மண்டை காயப் பண்ணுறாங்கள்.

ஆள விடுங்கோடாப்பா என்று அவங்கள்ட இருந்து கழற, இஞ்ச வாரும் ஐசே, நாங்க சமஷ்டி எடுத்து தாறம் என்று ஒராள் சீனியில்லாத தேத்தண்ணி வாங்கித் தந்தார்.

சீனி இல்லையே என்று கேட்டால் எங்க என்னை மொக்கன் என்று யோசித்து விடுவாரோ என்ற பயத்தில், தேத்தண்ணியாவது வாங்கித் தந்தாரே என்று யோசித்து விட்டு, சீனியில்லாத கச்சல் தேத்தண்ணியை கைக்க கைக்க குடிச்சுக் கொண்டிருக்க, வெளில Big Matchக்கு அடிக்கும் பப்பரே சத்தமும் பைலா பாட்டும் கேட்குது.

அரைவாசி குடிச்ச தேத்தண்ணியை அப்படியே வச்சிட்டு, தேத்தண்ணிக் கடையால வெளியே ஓடிவர, வாங்கோண்ணா... வாங்கோண்ணா.. வேலை வேணுமாண்ணா.. வேணுமாண்ணா என்று இளம் பெடியள் ஆடிக்கொண்டே கூப்பிடுறாங்கள்.

ஆளுக்கொரு வேலை, ஆனையிறவில் ஒரு resort, அத்தியடியில் ஒரு car park, அலுவல் முடிஞ்சுது.. எலகிரி அண்ணே என்று ஆண்டாண்டு கால எங்கட பிரச்சினையை தீர்க்க அவங்கள் டக் டிக் டோஸ் என்று plann சொல்லுறாங்கள்.

வாற நவம்பரில் உங்கட ஆள் வென்று, தை மாதம் நீங்க பதவியேற்றாப் பேந்து, எங்கட ஆக்களை உங்க அனுப்பி, உங்களைச் சந்தித்து, உங்களுக்கு ஒரு பொன்னாடை போர்த்தலாம் என்றால், இந்த நாலு கோஷ்டியில் எந்தக் கோஷ்டியை அனுப்புவது என்று யோசிச்சா நமக்கே மண்டை வெடிக்குது கமலாக்கா.

தப்பித் தவறி, இந்தியாக்கோ சைனாக்கோ போற வழியில், கட்டுநாயக்காவில் நீங்க தங்குற, அஞ்சு நிமிடத்தில, எங்கட ஆக்களில் ஆரை சந்திப்பியல் என்றதை முடிவெடுக்க, உங்கட ஆனானப்பட்ட இராஜாங்கத் திணைக்களமே திணறப் போகுதென்றால் பாருங்கோவன் எங்கட திறத்தை.

கமலாக்கா, இதுக்கு மேலயும் எழுதி உங்களுக்கு அலுப்புத் தர விரும்பேல்ல.. கடைசியா ஒன்றைச் சொல்லிட்டுப் போறன்..

நீங்க பதவியேற்கும் போது, ஒரு வார்த்தை.. ஒரே வார்த்தை தமிழில் சொல்லிட்டியல் என்றா காணுமக்கா.. நாங்க அதை வச்சே.. நீங்க வருவியல்.. ஏதாவது செய்வியல் என்று நம்பி நம்பியே அடுத்த அஞ்சு வரியத்தை ஓட்டிடுவம்..

ஏனென்றா அக்கா, எங்களுக்கு மிஞ்சியிருப்பது எங்களுக்கு எப்பவாவது ஒருநாள் விடிவு கிடைக்கும் என்ற ஏதோவொரு முரட்டுத் தனமான நம்பிக்கை மட்டுமே.

அந்த நம்பிக்கையை எந்த கொப்பனோ, சுப்பனோ, கோத்தாவோ ஏன் அவர்ட ஆத்தாவோ வந்தாலும் எங்களிடம் இருந்து பறிக்கேலாது, கமலாக்கா...

ஏலுமென்றா பண்ணிப் பார்க்க சொல்லுங்கோக்கா..

**நன்றி வணக்கமக்கா.**
**ஜூட் பிரகாஷ்**
**மெல்போர்ண்**







*பாடசாலைக் காலத்தில் கமலா ஹரிஸும், தங்கை மாயா ஹரிஸும் பெற்றோருடன்.

* சென்னையில் ஒரு புறம் தாய் சியாமளா கோபாலன். மறுபுறம் கமலா ஹரிஸ். இடையில் உறவினர்.

*பாடசாலைக்குத் தாயாருடன் புறப்படும் கமலாவும் தங்கை மாயாவும்.

# இந்தியாவைப் புறந்தள்ளி விட்டு நீதியான தீர்வைப் பெற இயலாது

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா விளக்கம்

**நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்த் தேசியக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீ காந்தா ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் சூழ்நிலையில், எதிர்காலத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலும், நாம் அனைவரும் எங்கள் நெஞ்சங்களில் தாங்கி நிற்கும் தமிழினத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்கு ஏதுவாக எத்தகைய நடவடிக்கைகளை குறுகிய மற்றும் நீண்ட தூர அளவில் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும் என்பது தொடர்பிலும், கருத்துக்களைப் பரிமாறி, செயற் திட்டம் ஒன்றை தீட்ட வேண்டிய கட்டத்தில் நாம் அனைவரும் நின்று கொண்டிருக்கிறோம்.

எமது தமிழ் தேசியக் கட்சியும் மற்றும் நான்கு தமிழ் அரசியல் கட்சிகளும், கரம் கோர்த்து அமைத்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, நாம் எதிர்பார்த்த வெற்றியை நாடாளுமன்ற தேர்தலில் பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும் கூட,பலமுனை மோதல் தீவிரமாக நிலவிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நாம் ஓர் ஆசனத்தை வென்றெடுத்திருப்பது, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் உள்ள அனைவரினதும் தீவிரமான செயல்பாடுகளுக்கு கிடைத்த ஆகக் குறைந்த அறுவடை என்பதோடு ஆறுதல் அளிக்கும் விடயமுமாகும்.

கிட்டத்தட்ட 98 விகிதம் தமிழ் மக்கள் வாழும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து எமக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கின்றது அதே வேளையில்,அம்பாறை மாவட்டத்தில் எம் இனத்திற்குரிய ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனம்,பல்முனை மோதலால் அடிபட்டுப் போய்விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடன், அங்கு நாம் போட்டியிட்டிருக்காத நிலையில்,எஞ்சிய வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நாம் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நல்லதொரு எதிர்காலத்திற்கான அரசியல் அடித்தளத்தை இட்டிருக்கின்றது என்று துணிந்து கூற முடியும். அதிலும் குறிப்பாக வன்னி மாவட்டத்தில் நாம் மேலும் கூடிய தீவிர பிரசாரத்தை சகல மட்டங்களிலும் முன்னெடுத்திருந்தால் ஓர் ஆசனத்தை நிச்சயம் பெற்றிருப்போம். அந்த ஆசனத்தை இழந்ததற்கான கூட்டுப் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றாக வேண்டும்.

### இப்போதைய கேள்வி

இப்பொழுது எம் இனத்தை எதிர்நோக்கியுள்ள கேள்வி புதிய அரசாங்கத்தை நாம் எவ்விதம் எதிர்கொள்ளப்போகிறோம் என்பதுதான்.

தீவிர சிங்கள, பௌத்த அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் இந்த அரசாங்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு உருவாகியிருக்கின்றது 1987 ஆடி 29ம் திகதி அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் அரசியல் சாசனத்தில் சில காத்திரமான திருத்தங்கள் செய்யப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும்.

1956 ஆம் ஆண்டிலிருந்து சிங்களம் மட்டுமே இலங்கையில் ஆட்சி மொழி என்ற ஏற்பாட்டில் ஒரு புதிய அம்சம் புகுத்தப்பட்டு தமிழும் ஓர் ஆட்சி மொழி ஆக்கப்பட்டது. ஆனால், ஒட்டுமொத்த அரசியல் சாசனத்தின் ஏற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் தமிழைப் பேசும் தமிழர்களும் முஸ்லிம்களும் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கே இந்த ஏற்பாடு பொருந்தும் என்பதே யதார்த்தமாகும். இருந்தாலும், இது வரவேற்கத்தக்க மாற்றம் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

### இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவு

கிழக்கு மாகாணத்தில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு அமைவாக, தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், பின்னர் 2007 இல் இலங்கையின் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றின் பிரகாரம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன

ஜே.வி.பி. கட்சி தொடர்ந்த வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அதிகாரப் பங்கீடு என்ற பெயரில் மாகாண சபைகள் திட்டம் கொண்டு வரப்பட்டது.

திருப்திகரமான அளவுக்கு அதிகாரங்கள் மாகாண மட்டத்தில் பங்கீடு செய்யப்பட்டிருக்காவிட்டாலும் கூட, கணிசமான அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டன என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பகிரப்பட்ட அதிகாரங்களின் கீழ் மாகாண மட்டத்தில் ஒரு மாகாணப் பொலிஸ் படை அமைக்கப்படவும், அரசாங்க காணிகளைப் பொறுத்தமட்டில், அவற்றை கையாள்வதில் கணிசமான, அதிகாரங்கள் கிடைக்கவும் பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் வழியமைத்தது.

இந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் 1988இல் அமைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு இதுவரையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. கடந்த 33 ஆண்டுகளாக இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் தமிழர்களும், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களோடு முஸ்லிம்களும் மாகாண சபையில் ஆட்சி அதிகாரம் பெறுகின்ற யதார்த்தத்தை மனதில் கொண்டு, காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் மறுத்துவந்துள்ளன.



புதிய அரசமைப்பு ஒன்றை அமைக்கப் போவதாகக் கூறி,நடவடிக்கைகளில் ஈடுபட்ட நல்லாட்சி அரசாங்கமும் இந்த விடயத்தைத் தட்டிக் கழித்தபடியே காலத்தைக் கடத்தியது.

### புதிய அரசின் நிலைப்பாடு

இப்பொழுது பதவி ஏற்றிருக்கும் அரசாங்கம் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று பகிரங்கமாக கூறியிருக்கின்றது.

மாகாண சபைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் இராஜாங்க அமைச்சரான முன்னாள் கடற்படை அதிகாரி, அதை திட்டவட்டமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

புதிய அரசியல் சாசனம் ஒன்று அமைக்கப்படும் என்றும், அதன் கீழ் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் இருக்கமாட்டா எனவும் அவர் கூறியிருக்கிறார். தனது பேச்சில் அவர் வடமாகாணத்தை குறிப்பிட்டு பேசியிருக்கிறார்.

மாகாண சபைகள் முறை இனப்பிரச்சனைக்கான தீர்வு அல்ல என்பது, ஒன்றிரண்டு ஒத்துழைப்பு கட்சிகள் தவிர, அனைத்து தமிழ் கட்சிகளின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது. அது ஓர் இடைக்கால ஏற்பாடாகவே இக்கட்சிகளால் கருதப்பட்டது.

மாகாண சபைகள் 1988ல் அமைக்கப்பட்ட பிறகு, இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு நடவடிக்கைகள் அனைத்தும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

### 13 பிளஸ்ஸும் மைனஸ்ஸும்

நடந்து முடிந்த யுத்தத்தின் போது, தீர்க்கமான ஒரு கட்டத்தில் இந்தியாவில் வைத்து, அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13வது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கத் தயார் என்று கூறியிருந்தார்.

அந்த நிலைப்பாடுதான் '13 பிளஸ்' அல்லது '13 சக' என்று அழைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்திற்கும் அந்த நிலைப்பாடு சொல்லப்பட்டது. இப்போது '13மைனஸ்' அல்லது '13 சய' என்ற நிலைப்பாடு புதிய அரசாங்கத்தினால் திட்டவட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வரப் போவதாக கூறும் ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக எதை முன்வைக்கப் போகின்றார்கள் என்பது சகலருக்கும் இப்போதாவது புரிய வேண்டும்.

நிகழப்போகின்ற விடயங்கள் தொடர்பில் விடுக்கப்பட்டிருக்கும் தெட்டத்தெளிவான அறிவிப்பு இது.

இப்போது இருக்கும் அரசியல் சாசனத்தில் ஏட்டளவிலாவது மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை விட்டு வைக்கப் புதிய அரசாங்கம் தயாரில்லை.

### தமிழர்களின் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கவும், அதில் தமிழ் மக்களுக்கு அரசியல் நீதி கிடைக்கும் விதத்தில் காத்திரமான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கிறது. அத்துடன் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலிலும், சிங்கள மக்கள் கொடுத்த மாபெரும் ஆதரவும் இருக்கின்றது.

இனப்பிரச்சினை தொடர்பில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வு ஒன்றினை உருவாக்குவதற்கு ஓர் வரலாற்றுச் சந்தர்ப்பம்,ஜனாதிபதியின் முன்பாகவும் அவரின் அரசாங்கத்தின் முன்பாக எழுந்து நிற்கின்றது.

ஆனால் சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுடன் செயற்படும் ஆளும் தரப்பு இந்தச் சந்தர்ப்பத்தை ஒரு கணமேனும் கவனத்தில் எடுக்கப் போவதில்லை. இதையே அவர்களின் பேச்சுக்களும் நடவடிக்கைகளும் தினமும் நிரூபிக்கின்றன.

இந்நிலையில் அரசியல் நீதி கோரி நிற்கும் தமிழ் இனத்தின் சார்பில் செயலாற்றுவதாகக் கூறும் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

கடந்த காலங்களில்16 ஆசனங்களை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 ஆசனங்களுடன் பரிதாபமாக நிற்கின்றது . 20 ஆசனங்களை பிடிப்போம் என்று அதன் தலைவர் திரும்பத் திரும்ப கூறிய போதும், நாங்கள் தெரிவித்தது இப்போது கசப்பான உண்மையாகி விட்டிருக்கின்றது.

### நீட்டப்படும் நேசக்கரங்களை தொடர்ந்து தட்டிவிடும் கட்சி

பதினொரு வருடங்களாக கட்சியை தொடர்ந்து நடாத்திவந்த நிலையில், முதற்தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்ற ஓர் ஆசனமும், கூடவே மயிரிழையில் கிடைத்த மற்றுமொரு தேசியப்பட்டியல் ஆசனமும் சேர்த்து இரண்டு ஆசனங்களுடன் நாடாளுமன்றம் செல்லும் இளைய தலைவர், ஒரு பெருந்தலைவர் பாணியில் நீட்டப்படும் நேசக்கரங்களை ஏகத்தாளமாகத் தொடர்ந்து தட்டிவிட்டுக் கொண்டிருக்கின்றார்.

### மட்டம் தட்டப்பட்டிருக்கும் கூட்டமைப்பின் நிலைமை

அதே வேளையில் 10 ஆசனங்களோடு மட்டம் தட்டப்பட்டிருக்கும் கூட்டமைப்பின் பெரிய கட்சியான தமிழரசு கட்சிக்குள்,யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், விருப்பு வாக்கு எண்ணிக்கையில் நிகழ்த்தப்பட்ட முறைகேடுகளும் மோசடிகளும்,வாக்கு எண்ணும் வளாகத்தில் தமிழரசுப் பிரமுகருக்கு பாதுகாப்பு வழங்கி வரும் சிறிலங்கா விசேட அதிரடிப்படை ஆகாயத்தை நோக்கி அதிர்வேட்டுக்களை தீர்க்கவும், கண்ணில்பட்ட ஒரு சிலரைக் குறி வைத்துத் தாக்கவும் வழிவகுத்தன என்பது, இலங்கையின் தேர்தல் வரலாற்றில் காணப்பட்டிருக்காத சோகச் சம்பவங்கள் ஆகும்.

அது போதாது என்று தேசியப்பட்டியல் நியமன விடயத்தில் இரண்டொரு நபர்களின் சர்வாதிகார அடாவடிகளைக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இனியாவது அடக்கி ஒடுக்கத் துணிந்து நிற்குமா? என்ற கேள்விக்கு இதுவரையில் திட்டவட்டமான பதில் கிடைக்கவில்லை.

இன்று தமிழரசுக் கட்சி மனோரீதியாகப் பிளவடைந்திருக்கின்றது. இந்த நிலைமையில் தமிழ்த் தேசிய சக்திகள் என்று அடையாளமிடப்பட்டிருக்கும் மூன்று தமிழ் அரசியல் அணிகளும் ஓர் கூட்டு அணியாக ஒன்று சேர முடியாவிட்டாலும், பொதுக் கொள்கை ஒன்றின் அடிப்படையிலான ஒரு செயல் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய அவசியமும் அவசரமும் உணரப்படாவிட்டால். தமிழ்த் தேசிய கட்சிகளுக்கிடையே ஆகக்குறைந்த அரசியல் ஒற்றுமை என்பது கூட வெறும் கனவாகவே தொடர்ந்து இருக்கும்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகிய மூவர் மங்குளம் ஆஸ்பத்திரியில்!

குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகாமம் பகுதியில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த பணியாளர்கள் மீதே திடீரெனக் குளவிகள் கொட்டின. பலர் குளவி கொட்டுக்கு இலக்காகினர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகி கடுமையாகப் பாதிக்கப்பட்ட மூன்று பேர் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தப் பகுதியில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றிய சுமார் 10 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உள்ளனர் எனத் தெரிய வருகின்றது

# இந்தியாவைப் புறந்தள்ளி....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### இன்று தேவைப்படுவது ஓர் புதிய அரசியல் கலாசாரம்

இன்று தேவைப்படுவது ஓர் புதிய அரசியல் கலாசாரம். தேர்தல் காலத்து பரஸ்பர கண்டனப் பரிமாற்றங்களையும் கசப்பான விமர்சனங்களையும் கடந்த காலத்தோடு விட்டுவிட்டு, ஓர் ஆத்ம பரிசோதனையை தமிழ்த் தேசியம் சார்ந்த ஒவ்வொரு கட்சியும், அவற்றின் தலைமைத்துவத்தை அலங்கரிப்பவர்களும் உடனடியாக நேர்மையோடு செய்து நிதானமாக முடிவுகளை விரைவாக எடுத்தாக வேண்டும்.

அதைச் செய்ய முடியுமானால், பௌத்த சிங்களப் பேரினவாத பேய்களும் பிசாசுகளும் ஆடத் தயாராகிக் கொண்டிருக்கும் கோரத்தாண்டவத்தை முன்கூட்டியே முற்றாக முறியடிக்கும் விதத்தில், ஓர் காத்திரமானதும் பலமானதுமான அரசியல் சவாலை, அனைவரும் இணைந்து தமிழர் தரப்பில் உருவாக்கிட இயலும்.

இலங்கை தமிழர்கள் ஒன்றும் அரசியல் அனாதைகள் அல்லர்.

எங்கள் பிரச்சனையில் பல வெளிநாடுகள் பல்வேறு காரணங்களுக்காக தொடர்ந்து ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளன. அயல் நாடான இந்தியாவின் சார்பில் அதன் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியும், அவர் தலைமையிலான அரசாங்கமும் அளித்த உறுதி மொழியினை நம்பித்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட, அனைத்து தமிழ்த் தேசிய விடுதலை போராட்ட அமைப்புக்களும் 1987ஆவணி முதல் வாரத்தில் தங்கள் ஆயுதங்களைக் கையளித்தன.

விடுதலைப்புலிகள் இயக்கம் பின்னர் போராட்டப்பாதைக்கு திரும்பி விட்டாலும் கூட, ஏனைய அமைப்புக்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தொடர்ந்து இணைந்தே வந்திருந்தன.

### ஆனால் இப்போது நாம் சந்திப்பது என்ன?

நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் அமைப்புமுறை கூட உள்ளிருந்தே உடைக்கப்படுகின்றது . அதன் அத்திவாரமே குறி வைக்கப்படுகின்றது.

முன்னாள் போராட்ட இயக்கங்களாக இருந்து அரசியல் கட்சிகளாக மாறியுள்ள அமைப்புக்களின் தலைவர்கள் இந்த விடயத்தில் என்ன செய்யப்போகின்றார்கள்?

இந்திய – இலங்கை ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கிடையில் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தம். அதன் கீழ் முப்பது வருடங்களுக்கு முன்னரே மாகாணங்களுக்குத் தரப்பட்டிருக்க வேண்டிய காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தரமறுத்தது,

யுத்தத்தைதை சாட்டாக வைத்தே காலத்தை இழுத்தடித்தது, இப்போது யுத்தம் முடிந்து 11வருடங்கள் கழிந்த நிலையில் கைவிரிப்பது என்பன எல்லாமே, சிங்களத் தலைமைகளை ஒரு செம்புச் சல்லிக்குக் கூட தமிழினம் நம்ப முடியுமா என்ற கேள்வியைத் தான் கொண்டுவந்திருக்கின்றது.

### இப்போது இந்திய அரசு என்ன செய்யப்போகின்றது?

இலங்கை அரசாங்கம் நயவஞ்சகத்தனமாகச் செயற்படுவதைத் தமிழ்த்தரப்பு கைகட்டிப் பார்த்திருக்க முடியாது.

இச் சூழ்நிலையில் இந்திய அரசு என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வியை நாம் அதனிடம் கேட்டாக வேண்டும். இந்தியாவை நம்பி மோசம் போனவர்களாக இலங்கைத் தமிழர்கள் இருக்கக் கூடாது.இருக்கவும் முடியாது.

இந்திய நாட்டில் எட்டுகோடி தமிழர்கள் வாழ்கின்றார்கள்இலங்கையில் சிங்களவர்களின்சனத் தொகையை, விட நான்கு மடங்கு எண்ணிக்கை! அத்துடன் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெரும்பான்மையினர் பின்பற்றும் அதே இந்து மதத்தைத்தான் நூறு கோடிக்கு மேற்பட்ட இந்தியர்கள் தமது மதமாக கொண்டுள்ளனர். எனவே நாம் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை.

சிங்கள பேரினவாதிகள் ஆற அமர, உட்கார்ந்து ஓர் அரசியல் சாசனத்தை உருவாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை சொல்லும் வரை நாம் காத்திருக்க முடியாது. 13ஆவது திருத்தத்தை உடனடியாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை தமிழர் தரப்பு ஒரே குரலில் கோர வேண்டும். ஒருங்கிணைந்த செயற் திட்டம் ஒன்றுக்கான ஓர் உற்சாக முன்னோடியாக இது நிச்சயம் அமையும்.

இந்தியாவைப் புறந்தள்ளி இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு நீதியான தீர்வு ஒன்றை வென்றெடுக்க இயலாது என்ற யதார்த்தத்தை நம் மக்கள் அனைவரும் மனதில் பதித்து செயற்படவேண்டும்

யார் விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாதான் வல்லரசு!

இதனை கடந்த காலத்தில் சில பல தடவைகள் நாம் மறந்து விட்டிருக்கின்றோம். மறக்கப்படக்கூடாத யதார்த்தம் அது.

இனிமேல் ஒரு போதும் நாம் அந்தத் தவறைச் செய்யக் கூடாது.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது இந்தியாவின் சிருஷ்டி. அது சிதைக்கப்படுவதை தடுப்பது இந்தியாவின் பொறுப்பு. அதை உரத்துச் சொல்ல நம்மில் எவரும் தயங்கக் கூடாது.

பூகோள அரசியலின் தாற்பரியங்களை புரிந்து கொண்டு முறையாகத் தமிழர் தரப்பு செயற்படுமானால் எமது இலட்சியத்தை நாம் அடைந்தே தீருவோம்.

இலங்கைத் தீவில் எமது மரபு வழித் தாயகத்தில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுயாட்சி அரசினை நிறுவிடும் எமது கனவும் நிச்சயம் நனவாகும்.

15



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி
'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விபரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. திருவெம்பாவையின் இறுதி நாள் உற்சவம் எது?**

..........................................................................................

**2. யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதியவர் யார்?**

..........................................................................................

**3. ஓங்காரப் பொருளாக விளங்குபவர் யார்?**

..........................................................................................

**4. தீபாவளி கொண்டாடப்படும் திதி எது?**

..........................................................................................

**5. வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தவர் யார்?**

..........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

15

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..........................................................
2. பிறந்த திகதி :..........................................................
3. கல்வி கற்கும் தரம் :..................................................
4. பாடசாலை :..............................................................

.........................................
கையொப்பம்

அனுசரணை -
LEARN EASY
DTPE CAMPUS
ஐடியல் அக்கடமி
காலைக்கதிர்







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2020 இல் வெளியிடப்பெற்றது.